நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 19 ஞாயிற்றுக்கிழமை (03.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 249

# பயங்கரவாதத்தை ஒழிக்க சார்க் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## தலைவர் பதவியை ஏற்று மஹிந்த அறைகூவல்

கொழும்பு,ஓகஸ்ட் 3

**பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு 'சார்க்' நாடுகள் ஒன்றிணைந்து முயற்சி மேற்கொள்ள - செயற்பட- வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறைகூவல் விடுத்துள்ளார்.**

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமான 15 ஆவது சார்க் நாடுகளின் தலைவர்களது மாநாட்டினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது மேற்கண்ட அறைகூவலை அவர் விடுத்தார்.

'சார்க்' அமைப்பின் புதிய தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது பதவியைக் கையேற்ற பின்னர் உரையாற்றுகையில் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இருந்து 'சார்க்' தலைமைப் பதவியை அவர் ஏற்றுக்கொண்டார்.

அவர் தமது தலைமை உரையில் மேலும் கூறியதாவது:

பிராந்திய நாடுகளிடையே சமாதானத்தையும், பாதுகாப்பையும் வலுப்படுத்துவ

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவ மணிகளே!

பரீட்சையை நீங்கள் இலகுவாக எதிர்கொள்வதற்கு வசதியாக, நாடளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்ற வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் 'உதய னு'க்கென விசேடமாகத் தயாரித்து வழங்கிய மாதிரி வினாத் தாள்கள் நாளை (04.08.2008) தொடக்கம் உதயனில் தொடர்ந்து வெளிவரவுள்ளன.

மாணவர்களே! முயற்சி செய்யுங்கள். வெற்றி உங்கள் கையில்!

## ஆழமில்லாத கடற்பரப்பில் செயற்பட கடற்படையின் புதிய படகுப் படையணி

கொழும்பு, ஓக.3

ஆழமில்லாத கடற்பரப்பிலும் வேகமாகச் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய அதிவேக அதிரடிப் படகுப் படையணி ஒன்றை கடற்படை புதிதாகத் தொடங்கியுள்ளது .ஆழமில்லாத கடற்பிரதேசங்களில் நட மாடும் கடற்புலிகளின் படகுகளைத் தேடி அழிப்பதில் கடற்படை இவ்வளவு கால மும் பிரச்சினைகளை எதிர் நோக்கிவந்தது எனவும் அதற்குத் தீர்வு காணும் வகை யிலேயே இந்தப் புதிய பட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டம் முழுவதும் இப்போது தமது வசம் எனப் படைத்தரப்பு அறிவிப்பு

வவுனியா, ஓக.3

மன்னார் மாவட்டம் முழுவதையும் தாம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர் என்றுபடைத்தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவினர் வெள்ளாங்குளம் பகுதியில் புலிகளுடன் நடத்திய சண்டையை அடுத்து மன்னார் மாவட்டம் முழுவதும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளதாக இராணுவத்தின் ஊடகப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - பாகிஸ்தானிய பிரதமர்கள் காபூல் தாக்குதல் குறித்துப் பேசினர்

கொழும்பு, ஓக.3

தெற்காசிய பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் சார்க் பிராந்திய நாடுகள் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்று இந்திய மற்றும் பாகிஸ்தான் பிரதமர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சார்க் மாநாட்டில் உரையாற்றிய இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்-

காபூலில் இந்தியத் தூதரகம் மீதான தாக்குதல் மற்றும் இந்தியத் தூதரகம் மீதான தாக்குதல் மற்றும் இந்திய நகரங்களில் அண்மையில் நடந்த தொடர் குண்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் புலிகளின் தாக்குதலில் அதிரடிப் படையினர் இருவர் பலி!

அம்பாறை, ஓக.3

அம்பாறையில் நேற்று சிறப்பு அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில்அதிகாரி உட்பட இருவர் பலியாகினர்; இருவர் காயமடைந் தனர்.

கஞ்சிக்குடிச்சாறு காட்டுப் பகுதியிலுள்ள விடுதலைப்புலிகளின் நிலைகளை நேற்று மு.ப 10மணியளவில் அதிரடிப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார், முல்லை. மாவட்டங்களிலிருந்து கிளிநொச்சிக்கு 10,000 குடும்பங்கள் இடம்பெயர்வு

### அரச அதிபர் வேதநாயகன் தகவல்

கிளிநொச்சி, ஓக.3

அண்மைக் காலமாக வன்னிப் பிரதேசத்தில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 10 ஆயிரம் குடும்பங்கள் புதிதாக இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சமடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் இத் தகவலைத் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் விசேட கருத்தரங்கு இன்று வலிகாமம் மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஓக.3

'உதயன்' பத்திரிகை நிறுவனமும் கொழும்பு யுனிலங்கா நிறுவனமும் இணைந்து தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு நடத் தும் விசேட செயலமர்வும் கருத்தரங்கும் இன்று ஆனைக் கோட்டை துரைஐயா மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் நடை பெறவுள்ளது.

திருகோணமலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கம், கலாநிதி செ.திருநாவுக்கரசு, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சுவாமிநாதன், முன்னணி ஆசிரியர் கே.தவயோகராசா, விரிவுரையாளர்சரா.புவனேஸ்வரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொள்வர்.

நாளைய செயலமர்வும் கருத்தரங்கும் வடமராட்சி மாணவர்களுக்காக மாலு சந்தியில் உள்ள பிரதேச சபை மண்டபத்தில் காலை 8.30மணி தொடக்கம் நடைபெறும்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தென்மராட்சி மாணவர்களுக்காக சாவகச்சேரி சிவன் வீதியில் உள்ள கலாசார மண்டபத்தில் கருத்தரங்கும் செயலமர்வும் நடைபெறும். (அ)

## புலி உறுப்பினர் தம்பியண்ணா கைதையடுத்து புதுகை முகாமில் இருந்த 100 அகதிகள் மாயம்

புதுக்கோட்டை, ஓக.3

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருந்த 100 பேர் மாயமாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலம் அருகே உப்பூரில் கியூப் பிரிவு மற்றும் உள்ளூர் பொலிஸார் நடத்திய வாகனச் சோதனையின்போது, இலங்கைக்குக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சகல பிரஜைகளையும் காப்பாற்ற இலங்கை அரசு முயலவேண்டும்

### தெற்காசிய விவகாரங்களுக்கான அமெ. அதிகாரி வலியுறுத்து

வாஷிங்ரன், ஓக.3

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து தொடர்ந்தும் இலங்கை பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றது என்பதை அமெரிக்கா ஏற்றுக்கொள்கிறது. ஆனாலும் இலங்கை அரசாங்கமும் தொடர்ந்து ஜனநாயக நாடுபோல செயற்பட்டு தனது சகல பிரஜைகளையும் காப்பாற்றவும் வேண்டும்.

- இவ்வாறு கூறியிருக்கின்றார் அமெரிக்காவின் புஷ் நிர்வாகத்தின் தென்னாசிய விவகாரங்களைக் கையாளும் முக்கிய புள்ளியான உதவி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் பௌச்சர்.

'சார்க்' உச்சிமாநாட்டில் அமெரிக்கத் தரப்பின் பார்வையாளர் குழுவின் சிரேஷ்ட பிரதிநிதியாகக் கொழும்பு வந்திருக்கும் அவர், இலங்கை எதிர்கொள்ளும் சில பிரச்சினைகள் குறித்துத் தாங்கள் கவனம் செலுத்துகின்றனர் என்றும், அவற்றைத் தீர்த்துக் கொள்வதில் சிறிது முன்னேற்றமாவது காட்டப்படும் எனத் தாங்கள் நம்புகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கைக்குப் புறப்பட முன்னர் வாஷிங்டனில் வைத்து 'ரெடிவ் கொம்' இணையத்தளத்துக்குப் பேட்டியளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய மாநாட்டில்..

கொழும்பு, ஓக.3

நேற்று ஆரம்பான சார்க் உச்சி மாநாட்டின் போது பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு, சார்க் நிதியம், உறுப்பு நாடுகளுக்கிடையே நெருங்கிய உறவைப் பேணல், மற்றும் எரிபொருள் பாதுகாப்பு, பிராந்திய மற்றும் அங்கத்துவ நாடுகளின் பாதுகாப்பு ஆகிய விடயங்கள் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது.

நேற்றைய மாநாட்டின் போது உரையாற்றிய தெற்காசியதலைவர்கள் அனைவரும் மேற்படி விடயங்கள் குறித்து தத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி டெஸ்ட்237 ஓட்டங்கள் முன்னிலையில் இந்திய அணி

காலி, ஓக.3

காலியில் நடைபெற்றுவரும் இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 237 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. தற்போது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிவரும் இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 200 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 329 ஓட்டங்களைக் குவித்திருந்தது. பதிலளித்து ஆடிய இலங்கை அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் தனது முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 215 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மஹேல 46 ஓட்டங்களுடனும், பிரசன்ன ஜெயவர்த்தன 5 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இந்திய சுழல் பந்துவீச்சாளர்களான ஹர்பஜன் சிங், அனில் கும்ளே ஆகியோர் இலங்கை அணியை 292 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தினர். அதிகபட்சமாக அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 86 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார்.

ஹர்பஜன் சிங் 6 விக்கெட்டுகளையும், அனில் கும்ளே 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

37 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாம் இன்னிங்ஸைத் தொடக்கிய இந்திய அணிக்கு ஷேவாக் - கம்பீர் ஜோடி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 90 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஷேவாக் 50 ஓட்டங்களுடன் சமிந்த வாஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்துவந்த டிராவிட் இம்முறை ஓரளவு சிறப்பாக ஆடினார். மறுமுனையில் அபார ஆட்டத்தைத் தொடர்ந்த கம்பீர் 74 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து மெண்டிஸின் சுழலில் 'போல்ட்' ஆனார்.

நேற்றைய நாளின் இறுதி இரண்டு ஓவர்களிலும் முறையே சச்சின் டெண்டுல்கர் 31 ஓட்டங்களுடன் சமிந்த வாஸின் பந்துவீச்சிலும், ராகுல் டிராவிட் 44 ஓட்டங்களுடன் முரளிதரனின் பந்துவீச்சிலும் ஆட்டமிழந்தனர்.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி தனது இரண்டாம் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 200 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் கங்குலியும் லக்ஸ்மனும் ஓட்டக்கணக்கை ஆரம்பிக்காமல் ஆட்டமிழக்காலிருந்தனர். இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் தொடரும்.





STR Computer System
384,Navalar Road, Nallur, Jaffna
T.P:- 021-4590775
E-Mail :- strcom20@yahoo.com

விடுமுறைக்கால கற்கைநெறிகள்

அனுபவம் வாய்ந்த கணினி விரிவுரையாளர்களின் நேரடிவழிகாட்டலில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| Diploma in Microsoft Office | (02Month) |
| Diploma in Desktop Publishing | (02Month) |
| Diploma in Hardware Technology | (02Month) |
| Diploma in Accounting Package | (03Month) |
| Diploma in Web Designing | (03Month) |

Diploma in General Information Technology (GIT) GR-12

Diploma in Information and Communication Technology (ICT) GR-10-11

Certificate in Internet E-Mail 1000/-

தரம் 3 முதல் 7 வரையான மாணவர்களுக்கு
KIDS Program சிறுவர்களுக்கான பயிற்சி நெறி

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்


# நிகழ்வுகள் இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஓக.3

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் படக்காட்சித் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் 'பியாஸா' திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

சர்வதேச திரைப்படக் கலைஞர் குருதத் இத் திரைப் படத்தைத் தயாரித்துள்ளார். (202)

* * *

யாழ்ப்பாணம், ஓக .3

ஐ.எல்.ஓ.நிறுவனமும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்திய பனைவள கைப்பணிப் பயிற்சியின் நிறைவு விழாவும் கண்காட்சியும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கட்டப்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்து கொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம், ஓக.3

தீவக லயன்ஸ் கழகத்தின் புதிய செயற்குழு பதவியேற்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக லயன் எஸ்.சிவராஜேஸ்வரன் தம்பதியினர், லயன் எஸ்.எஸ். தங்கராஜா தம்பதியினர் ஆகியோர் கலந்துகொள்வர்.

* * *

யாழ்ப்பாண வலய முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் கற்றல் கண்காட்சியும் கலை நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை கல்வியங்காடு செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொள்வார். (202-302)

* * *

இலங்கை வங்கியின் 69 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளன. (202)






## நாட்பட்ட அல்லைக்கிழங்கை உண்ட மாமன் மரணம்; மருமகன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஓக .3

தோட்டத்தில் விதைத்த அல்லைக் கிழங்கை மூன்று நாள்களின் பின்னர் சமைத்துச் சாப்பிட்ட முதியவர் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் ஒருவர் சுகயீனமுற்ற நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கல்வயல் முதலாம் கட்டையடியைச் சேர்ந்த பொன்னர் கந்தசாமி (வயது 70) என்பவரே உயிரிழந்தவராவார். அவரது மருமகனான அருணாசலம் நாகையா (வயது42) என்பவர் யாழ். போதனாவைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தோட்டத்தில் விளைந்த அல்லை கிழங்கை பிடுங்கி வந்துவீட்டில் வைத்திருந்து விட்டு 3 தினங்களுக்குப் பின்னர் கடந்த வியாழக் கிழமை சமைத்துச் சாப்பிட்டனர் எனக் கூறப்பட்டது.

இதனை அடுத்து கடுமையான வயிற்றுளைவினால் பாதிக்கப்பட்ட மாமனும் மருமகனும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப் பிவைக்கப்பட்டனர்.சிகிச்சை பயனளிக்காத நிலையில் மாமனான கந்தசாமி நேற்று வைத்திய சாலையில் உயிரிழந்தார். (202-131-208)

யாழ்ப்பாணம், ஓக.3

யாழ்ப்பாணம், புங்கன்குளம் வில்வை யடி ஸ்ரீ நாக பூசணி அம்பாள் ஆலய வரலாறும் அற்புதங்களும் அடகிய நூலின் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரி வுரையாளர் க.இ.கமலநாதன் தலைமை யில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நயப் புரையை வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி ப.கோபலகிருஷ்ண ஐயர் நிகழ்த்துவார்.

* * *

சங்கானை, ஓக.3

தொல்புரம் மன்னதோட்டம் ஜெகஜோதி அம்மாளின் புகழ்பாடும் ஜோதிப் பிரவாகம் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு, திருமதி இராமலிங்கம் குகபூசணி தலைமையில், ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக, வலி.மேற்கு, பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பொ.சந்திரவேல் கலந்துகொள்வார். (202-29)

* * *

யாழ்ப்பாணம், ஓக.3

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகவள பயிற்சி நிலையத்தின் இரண்டாவது அணி முழு நேர மாணவர்களின் 'கடிவாளம்' பயிற்சி இதழ் வெளியீடு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிலைய இயக்குநர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை இணப்பாளர் விமல்சுவாமிநாதனும் வாழ்த்துரையை துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சண்முலிங்கன், பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் என்.கிருஷ்ணராசா ஆகியோர் நிகழ்த்தவுள்ளார்கள். (202-[illegible])

## யாழ்ப்பாண மாநகரசபை
## நல்லூர் உற்சவம் 2008 - வீதித் தடைபற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கீழ் குறிப்பிடப் படும் வீதிகள் 06.08.2008 ஆம் திகதி தொடக்கம் 31.08.2008 ஆம் திகதி வரை வாகனப்போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும்:

01. ★அரசடிச் சந்திக்கும்2 ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்.
 ★ பிராமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச்சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்.
 ★செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் அப்பாகம்.

02. பாதை மாற்றம்
 ★பேரூந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய [illegible]ாகனங்கள் ஆனைப்பந்திச்சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தியூடாகச் செல்லுதல்;
 ★ பருத்தித்துறை வீதிக்கும், நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வழியாக பேரூந்துகளும், சிற்றூர்திகளும் செல்லுவது முற்றாகத்தடைசெய்யப்படும்.

03. வாகனத் தரிப்பிடங்கள்
 ★முத்திரைச்சந்திப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்பர்க்கமாக பருத்தித்துறை வீதியில். .
 ★கந்தர் மடச்சந்திக்கும் அப்பால் அரசடி வீதியில்.
 ★அம்மன் வீதி பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியில்.
 ★செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால்.

(மு.செ.சரவணபவ)
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய கிரகணங்கள் அடிக்கடி தோன்றுமா......
# ......சந்திரன் சூரியனை மறைப்பது எப்படி?

## நீண்ட இடைவெளியின் பின்னரே சூரிய கிரகணங்கள் இனி 2168 ஆம் ஆண்டில் இந்தியாவில் தோன்றும்

ஓகஸ்ட் மாதம் இரண்டு கிரகணங்கள் வரப் போகின்றன என்று பத்திரிகைகளில் வாசித்து அறிந்திருப்பீர்கள். இதில் முதலாவது சூரிய கிரகணமெனவும் அடுத்தது சந்திர கிரகணம் எனவும் செய்திகள் வெளியாகின. இரண்டு நாள்களின் முன், அதாவது ஓகஸ்ட் முதலாம் திகதி ஆடி அமாவாசையன்று சூரிய கிரகணம் ஏற்பட்டதைப் பலர் பார்த்திருப்பீர்கள்.

எனவே அது பற்றிய சில விளக்கங்களைக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

ஆதி காலங்களில் கிரகணங்கள் துர்நிகழ்வுகள் நடைபெறப் போவதை எதிர்வு கூறவே வருவதாக மக்கள் நம்பினார்கள். முன்னர் பல தடவைகள் கிரகணங்கள் ஏற்பட்ட போதெல்லாம் பாரிய பூகம்பங்களும், போர்களும் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அவற்றைக் கொண்டே கிரகணங்கள் ஏற்பட்டால் துர்நிகழ்வுகள் நடக்கும் என மக்கள் நம்பத் தொடங்கினர். எனினும் விஞ்ஞான ரீதியாக துர்நிகழ்வுகள் நடைபெற்றதற்கும் கிரகணங்கள் ஏற்பட்டதற்கும் எவ்வித தொடர்பும் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்படவில்லை.

கிரகணங்கள் பற்றி ஏராளமான தகவல்கள் வானியல் சம்பந்தமான புத்தகங்களில் கொடுக்கப்பட்டிருந்தாலும் 588 B.C. ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி ஏற்பட்ட பூரண சூரியக் கிரகணமே தேல்ஸ் (Thales) என்ற வானியல் நிபுணரால் முன்னரே எதிர்வு கூறப்பட்ட முதல் கிரகணமாகும்.


சூரிய கிரகணம் ஏற்படுவது சந்திரனின் நிழல் பூமியில் விழும் போதாகும். இதற்குச் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் ஒரே நேர்கோட்டில் வர வேண்டும். அத்துடன் இது சந்திரனும் சூரியனும் ஒரே கோட்டில் வரும் அமாவாசை நாள்களிலேயே நடைபெறலாம். அந்நேரம் சந்திரன், பூமியையும் சூரியனையும் இணைக்கும் நேர் கோட்டிற்கு அண்மையில் சென்று சூரியனின் கதிர்களில் ஒரு பகுதியை அல்லது எல்லாவற்றையும் மறைக்கும்.

### சூரிய கிரகணங்கள் மூன்று வகை

சந்திரனால் ஏற்படும் நிழல் இரண்டு வகைப்படும். 'கரு நிழல்' எனப்படுவது சந்திரனுக்குப் பின்னால் சூரியனுக்கு எதிர்த்திசையில் கூம்பு வடிவில் செல்லும் நிழலாகும். இந் நிழல் விழும் பிரதேசங்களில் சூரியனில் இருந்து வரும் கதிர்கள் அனைத்தும் தடுக்கப்படுகின்றன. 'அகநிழல்' எனப்படுவது சூரியனை நோக்கிய கூம்பு வடிவான நிழலாகும். இந் நிழல் விழும் பகுதிகளில் சூரிய ஒளி பகுதியாகவே மறைக்கப்படுகிறது. எனவே கரு நிழல் விழும் பகுதிகளில் நிற்பவர்களுக்குப் பூரண சூரிய கிரகணமும், அக நிழல் விழும் பகுதிகளில் நிற்பவர்களுக்கு பகுதியான சூரிய கிரகணமுமே தெரியும். சில வேளைகளில் 'கங்கண சூரிய கிரகணமும்' தோன்றலாம். கங்கண சூரிய கிரகணம் எனப்படுவது சூரியனின் மத்தியில் நிழல் விழுவதால் தோன்றுகிறது. அப்போது சூரியன் ஓர் வெள்ளி வளையமாகத் தோன்றும். கங்கண சீரிய கிரகணமும் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் வரும்போதே ஏற்படுகிறது. ஆனால் தற்போது கருநிழல் பூமியை அடையாது அப்போது கூம்பின் உச்சிக்கு அப்பால் செல்லும் கருநிழல் பூமியில் வட்டமாக விழும் இடங்களில் இருப்போருக்கு சந்திரனின் வட்ட நிழல் சூரியனின் நடுவில் விழுவது தெரியும். சந்திரனின் நிழல் சற்றுச் சிறிதாக இருப்பதால் அதனைச் சுற்றி சூரியனின் பிரகாசமான வளையம் தெரியும். இந் நிகழ்வையே கங்கண சூரிய கிரகணம் என அழைக்கிறார்கள்.

மேலும் சந்திரன் பூமியைச் சுற்றும் பாதையின் தளமும், பூமி சூரியனைச் சுற்றும் பாதையின் தளமும் ஒன்றாகப் பொருந்தியிருந்தால் சூரிய கிரகணம் ஒவ்வொரு 29 1/2 நாள்களுக்கு ஒரு முறையும் தோன்றியிருக்கும். ஆனால் சந்திரனின் பாதையின் தளம் சூரியனின் பாதையின் தளத்துடன் $5^{\circ}$ கோணத்தின் சரிந்திருப்பதால் கிரகணங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

சந்திரனின் சுற் றும் தளம், பூமி சுற்றும் தளத்தை கடக்கும் இடத்தைக் கணுக்கள் என அழைப்பர். இக் கணுக்கள் சுமார் சூரியனையும் பூமியையும் இணைக்கும் நேர் கோட்டிற்கு அண்மையில் வரும்போதே கிரகணங்கள் ஏற்ப வாய்ப்புண்டு. அவ்வாறான சேர்மானம் வருடத்தில் இரண்டு தடவையே ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அத்துடன் அப்படியான இரு சந்தர்ப்பங்களிலும் அமாவாசையும் சேர்ந்து வரவேண்டும். அப்போது தான் சூரிய கிரகணங்கள் ஏற்படும். இங்கு தரப்பட்டுள்ள வரைபடத்தில் பூமி, சந்திரனின் சுற்றுப் பாதையின் தளங்களையும், கணுக்களையும் காணலாம்.



பூமியினதும், சந்திரனதும் சார்புப் பாதைகளும் கணுக்களும் கிரகணங்கள் ஏற்படக் கூடிய நிலைகளும் இவ் வரைபடத்தில் காட்டப்படுகின்றது.

இக் கணுக்களின் நிலைகளிலேயே ராகு, கேது போன்றவை இருப்பதாக சாத்திரங்கள் கூறுகின்றன. இதனால்தான் கிரகணத்தை, ராகு, கேது சூரியனை விழுங்குவதால் ஏற்படுகிறது என்ற நம்பிக்கை இருந்து வந்தது.

### 360 வருடங்களுக்கு ஒரு முறையே ஒரே இடத்தில் பூரண சூரிய கிரகணம்

சந்திர கிரகணங்களை விட சூரிய கிரகணங்கள் 3:2 என்ற விகிதத்தில் நிகழ்கின்றன. பூரண சூரிய கிரகணம் தெரியும் போது சந்திரனில் கருநிழல் விழும் பாதையின் அகலம் சுமார் 269 கி.மீ. ஆகும். ஒரே இடத்தில் பூரண சூரிய கிரகணத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் மிக அரிது. பூரண சூரிய கிரகணம் ஒரே இடத்தில் சுமார் 360 வருடங்களுக்கு ஒரு முறையே ஏற்படும். சுமார் 238 சூரிய கிரகணங்கள் 100 வருடங்களில் ஏற்படுகின்றன. இவற்றில் 28 வீதம் பூரண சூரிய கிரகணங்களாகவும், 33 வீதம் கங்கண சூரிய கிரகணங்களாகவும், ஏனையவை பகுதியான சூரிய கிரகணங்களா கவும் இருக்கும். ஒரு வருடத்துள் ஆகக் குறைந்தது இரு (சூரிய்) கிரகணங்களும், ஆகக் கூடியது 7 கிரகணங்களும் ஏற்படலாம். ஆகக்கூடிய கிரகணங்களுள் நான்கு சூரிய கிரகணங்களும், மூன்று சந்திர கிரகணங்களும் அல்லது ஐந்து சூரிய கிரகணங்களும், இரண்டு சந்திர கிரகணங்களும் ஏற்படலாம்.

### பூரண சூரிய கிரகணம் ஏற்படுவதற்கான காரணி

கிரகணம் நடைபெறக் கூடியதாக இருப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது சந்திரனும், சூரியனும் எங்களுக்குக் கிட்டத்தட்ட ஒரே அளவினதாக தெரிவதே அந்தக் காரணமாகும். இரண்டும் எமது கண்களில் கிட்டத்தட்ட $0.5^{\circ}$ கோணத்தையே ஆக்குகின்றன. உண்மையில், சந்திரன், சூரியனைவிட [illegible] இருந்தாலும் [illegible] மடங்கு அண்மையில் இருப்பதாலேயே பூரண கிரகணங்கள் ஏற்படக் கூடியதாக வுள்ளது.

சந்திரன், சூரியனின் தோற்றம் அல்லது அவை ஏற்படுத்தும் கோணப் பருமன்கள் காலத்திற்குக் காலம் மாறுபடும். ஏனெனில் சந்திரன், பூமியைச் சுற்றும் பாதையும், பூமி, சூரியனைச் சுற்றும் பாதையும் நீள் வளையங்களாகும். இதனால் அவற்றின் (பூமியிலிருந்தான) தூரங்கள் ஒரு வருடத்தில் காலத்திற்கு காலம் மாறுபடும். சூரியனின் தோற்றப் பருமன் அதன் சராசரித் தோற்றப் பருமனிலிருந்து 1.7சத வீதம் சந்திரனின் தோற்றப் பருமன் அதன் சரா சரித் தோற்றப் பருமனிலிருந்து 7 சத வீதமும் ஒரு வருடத்தில் மாறுபடும். எனவே சூரிய கிரகணம் ஏற்படும் நாள்களில் சந்திரன் மிக அண்மையில் இருந்தாலே பூரண சூரிய கிரகணம் ஏற்படும்.

### பூரண சூரிய கிரகணம் இனி 2168 ஆம் ஆண்டில்

சூரியனின் சார்பாக சந்திரன் அதன் பாதையில் கிழக்கு நோக்கி கிட்டத்தட்ட 3,400 கி.மீ/மணி என்ற வேகத்தில் அசைந்து கொண்டிருப்பதால் அதன் நிழலும் பூமியில் அதே வேகத்தில் கிழக்கு நோக்கி அசையும்.ஆனால் பூமியும் கிழக்கு நோக்கிச் சுற்றிக் கொண் டிருக்கிறது. பூமத் திய ரேகையில் பூமியின் மேற்பரப்பு கிட்டத்தட்ட 1, 670 கி.மீ/மணி என்ற வேகத்தில் நகரும். எனவே சந்திரனின் நிழல் பூமியில் சுமார் 1,730 கி.மீ. / மணி என்ற வேகத்தில் நகரும். பூமத்திய ரேகையை விட்டு விலகியுள்ள இடங்களில் பூமியின் மேற்பரப்பின் வேகம் குறைவாக இருப்பதால் அவ்விடங்களில் சந்திரனின் நிழலில் சார்பு வேகம் அதிகமாக இருக்கும். நிழலானது வேகமாக அசைந்துகொண்டிருப்பதால் பூரண சூரிய கிரகணம் ஏற்படும். நேரமும் மிகக் குறுகியதாகும். பூரண சூரிய கிரகணம் ஏற்படும் பாதையில் இருந்து அதன் இரு பக்கமும் கிட்டத்தட்ட 3,000 கிலோ மீற்றர் தூரம் வரை பகுதியான கிரகணங்கள் தெரியும். அந்த இடங்களிலேயே சந்திரனின் அக நிழலும் விழும்.

பூமத்திய ரேகைக்கு அண்மையில் சூரிய கிரகணம் ஏற்படுவதற்கு ஏராளமான சாதகமான நிகழ்வுகள் நடைபெறவேண்டும். அதாவது சந்திரன் பூமியில் இருந்து அதி குறைந்த தூரத்தில் இருக்கவேண்டும். சூரியன் பூமியில் இருந்து அதி கூடிய தூரத்தில் இருக்க வேண்டும். அப் போது [illegible]ணம் நிகழும் நேரமும் அதி கூடியதாக, அதாவது ஏழு நிமிடம் 30 செக்கன்களாக இருக்கும். அவ்வாறான கிரகணம் இனிமேல் இந்தியாவில் 2168 ஆம் ஆண்டு ஆடி மாதம் 5 ஆம் திகதியே தோன்றும்.

கிரகணங்கள் அனைத்தும் ஓர் ஒழுங்கு முறைப்படியே நடைபெறுகின்றன. குறிப்பாக அவை சரோஸ் (Saros) என அழைக்கப்படும் ஆவர்த்தனத்திலேயே நடைபெறும். ஒவ்வொரு சரோஸ் சுழற்சிக்குப் பின்னர் ஒரே கிரகண ஒழுங்கு முறை மீண்டும் ஏற்படும். சரோஸ் சுழற்சிக்காலம் எனப்படுவது 18 வருடங்கள் 11 நாள்கள் 8 மணித்தியாலங்களாகும். இவ்வாறு ஒவ்வொரு சரோஸ் சுழற்சிக்காலத்தின் பின்னர் சந்திரனும், அதன் கணுக்களும், சூரியனின் சார்பாக மீண்டும் அதே இடங்களிற்குத் திரும்பிவரும். மேலும் ஒவ்வொரு சரோஸ் சுழற்சிக் காலத்தின் பின்னர் ஒரே வகையான கிரகணங்கள் மீண்டும் தோன்றினாலும் அவை பூமியில் ஒரே இடத்தில் மீண்டும் தெரியாது.ஏனெனில் சரோஸ் சுழற்சிக் காலம் 18 வருடம் 11 நாள்களைவிட 8 மணித்தியாலங்கள் அதிகமாகும். இதனால் கிரகணம் முன்னர் ஏற்பட்ட இடத்தில் இருந்து மேற்கு நோக்கி, பூமி கிழக்கு நோக்கிய அதன் பயணத்தில் 8 மணி நேரத்தில் எவ்வளவு தூரத்தைக் கடக்குமோ, அதே அளவு தூரம் தள்ளியுள்ள இடத்தில் தெரியும். இவ்வாறான கணிப்பீடுகள் எமது வேத சாத்திரங்களிலும் ஆயிரக்கணக்கான வருடங்களின் முன்னரே கூறப்பட்டிருப்பதும், அவற்றில் இருந்து கூறப்பட்ட முறைகளில் இருந்தே பஞ்சாங்கம் கணிப்பவர் கள் கிரகணங்களை எதிர்வுகூறுவதும் வியப்புக்கும் பெருமைக்கும் உரிய விடயங்களாகும்.

1980 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதி பூரண சூரிய கிரகணம் ஏற்பட்ட போது மூட நம்பிக்கைகளால் மக்கள் வீடுகளிற்குள்ளேயே முடங்கி இருந்தனர். ஊர் அடங்குச் சட்டம் அமுலில் இருப்பது போன்று வீதிகள் காணப்பட்டன. ஆனால் 1995 ஆண்டு ஒக்ரோபர் 24 ஆம் திகதி பூரண சூரிய கிரகணம் ஏற்பட்டபோது பழைய மூட நம்பிக்கைகள் மறைந்து மக்கள் வீதியில் வந்து கறுப்புக் கண்ணாடிகள் மூலம் சூரிய கிரகணத்தைப் பார்த்து மகிழ்ந்தனர். அப்போது நானும் இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் படித்துக்கொண்டு இருந்ததால் பூரண சூரிய கிரகணத்தைப் பார்க்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த அனுபவமே புதுமையானது. அப்போது கிரகணம் நிகழ்ந்த மொத்த நேரம் கிட்டத்தட்ட மூன்று மணித்தியாலங்கள் ஆகும். முதலில் சந்திரன், சூரியனை மறைக்கத் தொடங்கியது. பின்னர் மறைக்கப்படும் இடம் அதிகரித்துச் சென்று பூரண சூரிய கிரகணம் ஏற்படக் கிட்டத்தட்ட ஒரு மணி 30 நிமிடம் எடுத்தது. அதன் பின் நிழல் சூரியனை விட்டு சிறிது சிறிதாக விலகி இறுதியில் முற்றாக விலகியது. பூரண சூரிய கிரகணம் ஏற்படக் கிட்டத்தட்ட மூன்று நிமிடங்கள் முன்னரே வானம் இருண்டது, பறவைகளும், மிருகங்களும் பயத்தால் கத்தியபடி தமது இருப்பிடத்திற்குச் சென்றன. சில பூக்கள் மலர்ந்தன. சில இலைகள் சுருங்கின. இவ்வாறு பூரண சூரிய கிரகணம் நடைபெறும் போது ஓர் அதிசயமாகவே தோன்றும். சந்திரன் சூரியனை முற்றாக மறைத்துக் கொண்டிருக்கும்போது சந்திரனிலுள்ள மேடு பள்ளங்களினூடாகச் சூரிய வெளிச்சம் தப்பி வருவதே அதிசயக் காட்சியாக இருக்கும். இலங்கையிலுள்ள எங்களுக்குப் பூரண சூரிய கிரகணம் முழுமையாகத் தெரியாது. ஆனால் கிட்டத் தட்ட 70 வீதம் மறைவதே அதிசயமான காட்சியாகும். #

கிரகணம் நடந்த நேரம் நெல்லியடியில் வெவ்வேறு நேரங்களில் கட்டுரையாளரால் எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.






கலாநிதி நாகலிங்கம் சிவயோகன் (சிரேஷ்ட விரிவுரையாளர் பௌதிகவியல் துறை, யாழ்.பல்கலைக் கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**மாந்தை நவரத்தினம்**
*(சின்ராசு)*

தோற்றம்
21.04.1961

மறைவு
04.07.2008

04.07.2008 அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கச்சாய் வீதி,*
*சாவகச்சேரி.*

குடும்பத்தினர்.

## முதியோருக்கு சிற்றுண்டி

யாழ்ப்பாணம், ஓக.3

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி முதியோர் இல்லம் முதியோருக்கு இன்று சனிக்கிழமை மாலை சிற்றுண்டி வழங்கவுள்ளதாகக் கழகச் செயலாளர் லயன் எஸ். கே.நவரத்தினம் தெரிவித்தார்.

(202-207)



கோப்பாய் மத்தி நாவலடி
திருவருள் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான

## இரதோற்சவம்



இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு அபிஷேக பூசைகள் ஆரம்பமாகி காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறும்.

மஹோற்சவ குரு:
வேதாகம சங்கிரகர், வேதஞான சுரபி
சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள்,
ஊரெழு.

தேவஸ்தான குரு:
பிரம்மஸ்ரீ சி.சிவசரவணபவ
சிவமோகனசர்மா
கோப்பாய்.

அலங்காரம் : கு.போகன் [இணுவில்]
மங்களவாத்தியம் : சுதன் குழுவினர் [இருபாலை]
ராசன் குழுவினர் [கல்வியங்காடு].

விளம்பர அனுசரணை: மாஸ்டர் வீடியோ/ போட்டோ
கிழுவானைவீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

## 'ஆர்கொலோ சதுரர்' நூல், இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 3

நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பான 'ஆர்கொலோசதுரர்' நடன நாடகத்தின் நூல், ஒலி இறுவட்டு ஆகியவற்றின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சி.திருநாவுக்கரசு வெளியீட்டுரையையும் திருமதி சாந்தினி சிவநேசன் ஏற்புரையையும் சோ.பத்மநாதன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர்.

(202)

# நித்திய நினைவுகளோடு ஓராண்டு

அமரர்
**சிவகுரு செல்வநேசன்**
*திதி: 03.08.2008 துதியை*



மண்ணின் மடியில் 04.08.1956

இறைவன் மடியில் 15.08.2007

நீங்கள் விட்டுச்சென்ற
நினைவுகளின் தடங்களில்
நித்தமும் தேடுகின்றோம்....
நிஜங்களின் நிதர்சனங்களை
ஒரு தரவுகளின் தார்ப்பரியமாக
கண்ணீரினைச் சொரிந்தபடி....

கல்வளை வீதி, சண்டிலிப்பாய். குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்
04
08
1955



விண்ணுலகில்
14
08
2007

**அமரர் முத்தன் சந்திரன்**
*திதி: 03.08.2008*

ஓராண்டு ஆனபோதும் ஆறவில்லை எம்துயரம்
என்றென்றும் உங்கள் நினைவில் நின்று
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் நினைவில் வாழும்:
மனைவி: சரஸ்வதி
பிள்ளைகள்: அசோக்குமார், அஜந்தினி, அபர்ணா, சர்மிளி, சிந்துஜன், ஆர்த்திகா, றுக்ஷன்.
மருமக்கள்: கல்பனா, விமலவதனன்.
பேரப்பிள்ளைகள்: விதுலன், சியா.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 23 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
08.04.1928

அமரர்

மறைவு
12.07.2008

## சிவக்கொழுந்து மாசிலாமணி

(உரிமையாளர், மாசிலாமணி ஆபரண மாளிகை)

12.07.2008 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவுத் துயரில் பங்குகொண்டு எமக்கு ஆறுதல் தந்தும் இறுதிக் கிரியைகளில் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தும், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியோருக்கும், துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு.

தகவல்:
மா.மங்களேஸ்வரன்
(ரவி - மகன்)


(76871)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையுலகில் தமக்கென்று சில நெறிமுறைகளை வகுத்துப் பேணியவர் கலையரசு சொர்ணலிங்கம்

## 71 ஆவது வயதிலும் புதிய கருத்துகளை உள்வாங்கும் இயல்பு கொண்டவராக விளங்கியவர் அவர்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், தமது பன்னிரண்டாம் வயதில் கலையுலகப் பிரவேசம் செய்த சொர்ணலிங்கம் 67 வருட காலம் ஈழத்து நாடகப் புலத்தில் தமது முத்திரையை ஆழமாகப் பதித்தவர். சிறுவயதில் யாழ்ப்பாணத்தில் ஆடப்பட்ட நாட்டுக் கூத்துகளைப் பார்த்து ரசித்த கலையரசு, உத்தியோக நிமித்தமாக கொழும்பு போய் வாழ நேர்ந்தபோது, இந்தியாவிலிருந்து வந்த நாடகக் குழுக்கள் மேடையேற்றிய நாடகங்களைப் பார்த்தார்.



கலையரசு சொர்ணலிங்கம்

1911 இல் சென்னைச் சுகுணவிலாச சபாவினர் கொழும்பில் நாடகங்கள் போட்ட போதுதான், சொர்ணலிங்கம் பம்மல் சம்பந்த முதலியாரைச் சந்தித்தார். அவர் ஆசீர்வாதம், ஆலோசனையோடு லங்கா சுபோத விலாச சபா இயங்கத் தொடங்கியது. சொர்ணர் வாழ்க்கையில் நாடகம் நிரந்தர இடத்தைப் பிடித்துக்கொண்டது.

''சொர்ணலிங்கம்'' நாடகமாடியது ஒரு புதுமையல்ல; நாடகமாடாதிருந்தால்தான், அது ஒரு புதுமையாய் இருந்திருக்கும்!'' - இது இலங்கை வானொலியில் நாடகத் தயாரிப்பாளராயிருந்த ''சானா'' சொன்னது.

''நாடகமே என் நினைவு; நாடகமே என் கனவு; நாடகமே என் இன்பம்; நாடகமே என் கவலை; நாடகக் கலையே என் தெய்வம்'' என வாழ்ந்து வருபவர் கலையரசு சொர்ணலிங்கம் - இது பேராசிரியர் சு.வித்தியானந்தனுடைய வாக்குமூலம்.

'நாடகமாடுவது இழிவு' என்ற கருத்து சமூகத்தில் வேரூன்றிய காலத்தில் நடிக்க வந்தவர் கலையரசு. அவரது குடும்பத்தினர் தந்த ஆதரவே இத்துறையில் அவர் முன்னேறக் காரணம். நாடக சபாவில் தாம் சேருவதற்குத் தந்தையாருடைய அனுமதியைக் கோரியபோது, அவர் எழுதிய பதில்:

It woulb be a betfer occupation than going to somebodg's house and playing cards.... (பிறர் வீட்டில் போய் கடதாசி விளையாடுவதை விட, இது நல்லதொரு ஈடுபாடு) கலையரசரின் தமையன், மனைவி, தம்பி முதலிய குடும்ப உறுப்பினர்கள் அவருக்குப் பக்கபலமாய் இருந்தனர். தமது குடும்பச் சுமைகளையெல்லாம் தாங்கிய தம்பி இறந்தபொழுது அவர் மிகவும் துயரமடைந்தார்.

சொர்ணலிங்கமும் சம்பந்த முதலியாரும் மேடையேற்றிய நாடகங்கள் பெரும்பாலும் புராண, இதிகாசக் கதைகளும், ஷேக்ஸ்பியருடைய நாடகங்களின் தமிழ் வடிவங்களுமே. ஷேக்ஸ்பியர் கூட, சொந்தக் கதைகளை ஆக்கியதில்லை. அது குறையல்ல. இரவல் வாங்கிய கதைகளுக்கு நாடக வடிவங்கள் கொடுத்ததே அவர் பணி. கதை கூட முக்கியமல்ல. ஷேக்ஸ்பியர் தரும் வியாக்கியானமே முக்கியம்.

**கடந்த வாரம் (27.07.2008 இல்) மானிப்பாயில் நடந்த கலையரசு நினைவு நிகழ்ச்சியில் ஆற்றப்பட்ட சிறப்புரையின் தொகுப்பு இது.**

லீயர் மன்னனுக்கு ஆண் வாரிசு இல்லை. பெண் பிள்ளைகள் மூவர். வயதாகிவிட்டதால், தன் ராச்சியத்தைப் பிள்ளைகளிடையே பங்கிட முனைகிறான். அவையைக் கூட்டுகிறான். பெண்களை ஒவ்வொருவராக அழைத்து ''என்னை எந்த அளவு நேசிக்கிறீர்கள் என்பதை அவையினருக்குச் சொல்லுங்கள்!'' எனக் கேட்கிறான். மூத்தவர்கள் இருவரும் தந்தைக்கு உவப்பான சொற்களைச் சொல்லுகிறார்கள். லீயர் மனம் குளிர்கிறது. கடைக்குட்டி கோடிலியாவைக் கேட்கிறார்.

''சொல் மகளே நீ என்னை எவ்வளவு நேசிக்கிறாய்?''

''ஒரு மகள் தந்தையை நேசிக்கும் அளவுக்கு!''

''அவ்வளவுதானா?''

''அவ்வளவே தான்!''

''சிந்தித்துச் சொல். அதற்கு மேல் ஒன்றுமில்லையா?''

''ஒன்றுமில்லை!''

''உனக்கும் ஒன்றுமில்லை!''

லீயர் மன்னன் தன்மேல் உயிரை வைத்திருக்கும் அருமை மகளை ஒதுக்கிவிடுகிறான். ராச்சியத்தில் அவளுக்குப் பங்கு தரவில்லை. போலியுரை சொன்ன புதல்வியர் கைவிட, லீயர் பைத்தியம் பிடித்து அலைகிறார். கோடிலியாவின் அருமையை அவர் உணரும்போது, அவள் உயிருடன் இல்லை.

இந்த நாடகம் நமக்கு என்ன சொல்கிறது? உண்மை அன்பை வார்த்தைகளால் அளவிடமுடியாது என்று சொல்கிறது. எல்லா உறவுகளிலும் மேலானது பெற்றோர் - பிள்ளைகள் உறவு. அதில் தவறு - விரிசல் ஏற்படும்போது எல்லாம் தலைகீழாகி விடுகிறது; அவலம் நேர்கிறது. நாடகத்தின் இறுதியில் லீயர் சொல்லுவார்.

''கூட்டிக் கழித்துப் பார்த்தால் மனிதன் ஒரு கவடுபட்ட விலங்கு!''

இதுதான் நாடகம் தரும் ஞானம்; தரிசனம்!

### கர்ணனை ஆய்வுக்கு உட்படுத்திய தேரோட்டி மகன்

கலையரசர் பிற்காலத்தில் (1959) தயாரித்த நாடகங்களில் முக்கியமானது. 'தேரோட்டி மகன்'. சென்னையில் சேவாஸ்டேஜ் குழுவினர் நடத்திவந்த இந்நாடகப்பிரதியை எழுதியவர் பி.எஸ். ராமையா. யாழ் நகர சபை மண்டபத்தில் அரச அதிபர் ம. ஸ்ரீகாந்தா தலைமையில் மேடையேறிய இந் நாடகத்தில் கலையரசு சகுனியாக நடித்தார். ஏ.ரகுநாதன்-கர்ணன்; ம. சண்முகலிங்கம்- அருச்சுனன்; ம. மனோகரன்- துரியோதனன்; நவாலியூர் நடேசன்- துச்சாதனன். எஸ். சிவராமலிங்கம்- குந்தி; என். கனகரத்தினம்- கிருஷ்ணன் இதிகாச பாத்திரமாகிய கர்ணனை ஆய்வுக்குட்படுத்தியது இந் நாடகம். கலையரசர் புதிய கருத்துக்களைப் போக்குகளைத் தமது 71 ஆம் வயதில் கூட உள்வாங்கும் நிலையில் இருந்தார் என்பதைக் காட்டவே இதைக் குறிப்பிடுகிறேன்.

கலையரசருடைய காலத்தில் பெண்கள் மேடையேறி நடித்ததில்லை. ஆண்களே பெண் வேடமிட்டனர். சரவணமுத்து போன்ற நடிகர்கள் பெண் வேடத்தில் சோபித்தனர். கலையரசு கூட, கூனி வேடம் ஏற்றவர்தானே! கலையரசு நடித்த பாத்திரங்களில் விசுவாமித்திரர், கூனி, ஷைலொக் ஆகியவை அவருக்குப் பெரும் புகழ் தந்தவை எனலாம்.

### கொலையாளி வேடத்தையும் தயங்காது ஏற்று நடித்தவர்

நாடகம் ஆடுவோர் கலையரசிடமிருந்து கற்க வேண்டியவை பல: ''நாடகக் கலையை ஜீவனோபாயமாகக் கொள்ளக் கூடாது'' என்பது தந்தையார் அவருக்கிட்ட ஆணை. அதைக் கடைசிவரை பேணி வந்தார். ஒத்திகைகளை மிகச் சிரத்தையோடு நடத்தினார். குறுகிய காலத்தில் பழக வேண்டி ஏற்பட்டபோது, இரவிரவாகக் கண்ணாடி முன் நின்று நடித்துப் பார்த்தாராம். எந்த வேடத்தையும் ஏற்கத் தயங்

**சோ.ப.**

கியதில்லை அவர். சக நடிகர்கள் (பொறாமை காரணமாக) கொலையாளி வேடத்தை ஏற்கும்படி கேட்டபோதும் தயங்காது அதை நிறைவேற்றினார். ஒப்பனை முதலிய ஆயத்தங்கள் செய்யப்படும்போது, நாடகத்தோடு சம்பந்தப்படாதவர்களை உள்ளே அனுமதிப்பதில்லை. பிறர் நாடகம் போடும் போது, தாமும் மேடைக்குள் போவதில்லை.

ஒழுங்கீனம், ஒழுக்கக்கேடு-எல்லாம் சகஜமாகிவிட்ட கலையுலகில் தமக்கென்று சில நெறி முறைகளை வகுத்து அவற்றைப் பேணிய கலையரசு இமயமென உயர்ந்து நிற்கிறார்.

சுகுணவிலாச சபை கொழும்பில் நாடகம் போட்ட காலத்தில், ஏ.கிருஷ்ணசாமி ஐயர் என்ற நடிகரின் நடிப்பைப் பார்த்துப் பிரமித்துப்போன இளைஞரான சொர்ணலிங்கம், ''ஒரு நல்ல நடிகனாக விரும்புபவன் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்க அவர் சொன்ன பதில்:

" If you want to be a good actor, you must fall in love with the art; you must be madly in love with the art; you must be married to the art"

இது ஒன்றும் புதிய கருத்து அல்ல.

*''சித்தம் தளர்ந்த துண்டோ?- கலைத் தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு பித்துப் பிடித்தது போல் - பகல் பேச்சும் இரவிற் கனவும்.....''*

வந்ததாக, தான் கவிதை மீது கொண்ட வெறியைப் பாரதி கூறவில்லையா? ***

---

# இடப்பெயர்வுகளால் இன்னலுறும் பெண்கள்

சமுதாயத்தில் தளம்பல்கள் ஏற்படும் போது முதலில் பாதிக்கப்படுபவர்கள் பெண்களாவர். நாட்டின் சூழ்நிலையால் நலன்புரி நிலையங்களில் வாழவேண்டிய சூழ்நிலைக்குப் பல குடும்பங்கள் தள்ளப்பட்டுள்ளன.

பெண்கள் கைது செய்யப்படல், சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடல், குடும்பப் பொறுப்புக்கள் சுமைகளை சுமத்தல், பாலியல் துஷ்பிரோயகம், குடும்பத் தலைவர்கள் ஆயுதக்குழுக்களில் இணைவதால் ஏற்படுகின்ற குடும்பப் பிரச்சினைகள், வேலையின்மை எனப் பல்வேறான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர் என வவுனியாவிலுள்ள SHADE நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிர்மலா கருத்து வெளியிட்டார்.

பலதரப்பட்ட நிலைகளில் பிரச்சினைகள் ஏற்படுவதினால் மனோரீதியில் பெண்கள் அதிகம் வேதனைக்குள்ளாகின்றனர். இயற்கை உபாதை காலங்களில் - மாதவிடாய், பிள்ளைப்பேறு போன்ற காலங்களில் - பெண்கள் பாதிக்கப்படுவதோடு முகாம் சூழலில் சுகாதாரம், போசாக்கு தொடர்பிலான பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

இவை ஒரு பெண்ணுக்கு கூடுதலான மனப்பாதிப்பை ஏற்படுத்துகிறது என உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தேவிகா தயாபரன் தெரிவித்தார்.

ஆண்கள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகின்றபோது பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். பொருளாதாரப் பிரச்சினைகள், குடும்ப வன்முறைகள் போன்றவற்றை அன்றாடம் பெண்கள் எதிர்நோக்குகின்றார்கள். குடும்பங்களில் நிதிப்பற்றாக்குறை ஏற்படும்போது அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள் என மட்டக்களப்பு CARE சர்வதேச நிறுவனத்தின் திட்டப்



பணிப்பாளர் தங்கவேல் தெரிவித்தார்.

'பிள்ளைகளைப் பள்ளிக்குச் சேர்க்கப் போகும்போது நீங்கள் அகதிகள் என்பதால் எங்களை [illegible] கள்.' 'பல்கலைக்கழக அனுமதி வழங்கும் சமயங்களில் எங்களுக்கான அனுமதி எங்கள் சொந்த ஊரிலும் இல்லாமல் நாங்கள் தற்போது தங்கி இருக்கும் முகாம்களுக்கும் கிடைக்காமல் போய்விடுகிறது' என புத்தளம் நலன்புரி நிலையங்களில் வாழும் இருவர் தங்கள் இன்னல்களைத் தெரிவித்தனர்.

எந்தவொரு பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு. தீர்வினைத் திட்டமிட்டு செய்வதன் மூலம் பெண்களின் தேவைகளை நிறைவேற்றலாம். புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு கடன் திட்டங்களை வழங்குதல், குடும்பங்களுக்கு இடையில் பாதுகாப்பான சூழலை உருவாக்குதல், பெண்களிடையே கலை, கலாசார விழுமியங்கள் தொடர்பிலான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல், ஆண்பெண் இருவரிடையே தம்முடைய பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதற்கான சூழலை உருவாக்குதல் போன்றவற்றை வவுனியா மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தலாம் எனவும் கைத்தொழில் தொழிற்சாலைகளை நிறுவுவது உட்பட பல தீர்வுத் திட்டங்களையும் முன்வைத்தார் SHADE நிறுவனத்தைச் சேர்ந்த நிர்மலா.

பிரதேசத்திற்குப் பிரதேசம் தேவைகள் வித்தியாசப்படும். அத்தேவைகளை சரியாக இனங்கண்டு வழங்குவது சாலச்சிறந்தது. மட்டக்களப்பு மீள்குடியேற்ற உயர் அதிகாரி கமலதாஸ் இதுகுறித்துத் தெரிவிக்கையில் பாடல்கள், கவிதை, கதை எழுதுதல், சிறுபிள்ளைகளை எவ்வாறு வளர்த்தல், சுகாதாரத்தை எவ்வாறு பேணுதல், சிக்கனமாக தங்களுடைய வளங்களை வைத்

**பொருளாதாரப் பிரச்சினைகள், குடும்பவன்முறைகள் போன்றவற்றை அன்றாடம் பெண்கள் எதிர்நோக்குகின்றார்கள்.**

**• குடும்பங்களில் நிதிப்பற்றாக்குறை ஏற்படும்போதும் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே**

துக் கொண்டு எவ்வாறு தங்களுடைய வாழ்வை நடத்துவது போன்ற ஆலோசனைகளை வழங்குதல், நண்பர்கள் உறவினர்களுடன் தங்கவைக்க உதவுதல், அல்லது அவர்களை மீளக்குடியேற்றுதல் போன்றவற்றை பெண்களுக்குச் செய்யலாம் என்றார்.

அரசாங்கத்திற்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் சர்வதேச நாடுகளிலிருந்து நிதி கிடைப்பதனால் அதனை உரிய முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்துவதன் மூலம் பெண்களின் இன்னல்களைத் தீர்ப்பதற்கு வழி ஏற்படும். ***

*(நன்றி: மீண்டும் வாழ்வோம் - Inter press)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்

## திவ்யதேவி மஹோற்சவ தேர்த்திருவிழாச் சிறப்பு மலர்- 03.08.2008

### கோலாகலமாகத் தேரேறி வரும் வாலாம்பிகையே வருக!



அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான ஆதிபராசக்தியான அன்னை வண்ணையில் வாலாம்பிகையாக - ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி யின் அருட்சக்தியாக- வீற்றிருந்து வழிபடும் அடியார்களின் இன்னல் தீர்க்கும் தாயாக விளங்குகின்றாள். அந்த அன்பு அன்னைக்கு இன்று தேர்த்திருவிழா. கோலாகலமாகத் தேரேறி வருகின்ற வாலாம்பிகைத் தாய் கோடி சூரிய பிரகாசத்துடன் ஜெகஜோதியாக காட்சிதந்து அலங்கார பூஜிதையாக அருள்சுரக்கும் பொன்னான நன்னாள் இது.

உடலுக்கு வரும் நோய் தீர்ப்பவர் வைத்தியர்; எமது பிறவிப்பிணி தீர்ப்பவர் எல்லாம் வல்ல இறைவன் வைத்தீஸ்வரர். அந்த வைத்தீஸ் வரருக்குச் சக்தியான அம்பிகை தையல்நாயகி என்னும் பெயரில் சிவ சக்தியாக அருள்பாலிக்கின்றாள்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயம் காங்கேசன்துறை வீதி யிலே யாழ்ப்பாணத்தின் மத்தியில் நடுநாயகமாக அமையப்பெற்று வானளாவ உயர்ந்த இராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

இத்தலத்தில் வருடந்தோறும் பங்குனியில் சிவன் மஹோற்சவமும் ஆடியில் அம்பாள் மஹோற்சவமும் நடைபெறும். பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்யும் நோக்கில் அங்கப்பிரதட்சணம் செய்தும் அடியழித்தும் வலம் வந்து வழிபாடியற்றுவார்கள். மூன்று சுற்றுப் பிரகாரங்களையுடைய இந்த ஆலயத்தின் தெற்குப் புறத்திலே தீர்த்தக் கேணி இருக்கின்றது.

பாவநாச தீர்த்த சித்தாமிர்த புஷ்கரணியான இத்தீர்த்தம் நோய்நீக்கும் அருமருந்தாகும். வைத்தியர்களுக்கெல்லாம் மகாவைத்தியராக விளங்கும் பரங் கருணைத் தடங்கடலான பரமசிவன் இந்த ஆலயத்தில் ஸ்ரீ வைத்தீஸ்வரராக எழுந் தருளி அடியவர்களின் உள்ளங்கவர் கள்வனாக அருட்பெருஞ்சோதியாகப் பிரகாசிக்கின்றார்.

இன்றைய தேர்த்திருவிழாவைக் காணவும் தேர்வடம் பிடித்து இழுக்கவும் அன்னையின் அருட்பிரவாகத்தில் மூழ்கித் திளைக்கவும் அடியார் கூட்டம் அலைமோதும் காட்சி உள்ளத்தைத் தொடும் ஆனந்த பரவசம் தரும் அற்புதக்காட்சியாகும். இக்காட்சியைக் கண்டு அம்பிகையைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்று நல்வாழ்வு வாழப் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். எனவே அம்பிகையைச் சரண்புகுந்து அதிகவரம் பெற்றுய்ய அவளருளையே நாடி நிற்போமாக.

சிவநெறிக்கலாநிதி **இராசையா ஸ்ரீதரன்.**

### பிரதம குருவின் ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் தழைத் தோங்கும் யாழ்ப் பாணத்தின் கண்ணாக விளங்கும் வண்ணை யம் பதியினிலே அருளாட்சி செய்கின்ற ஸ்ரீ மத் வாலாம்பிகாதேவி சமேத வைத்தீஸ்வர தேவஸ் தானத்தின் வாலாம்பிகா தேவியின் திவ்விய மகோற்சவத்தின் தேர்த் திருநாளினிலே தேர் பவனியில் கலந்துறும் மக்களுக்கு சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு கிடைக்கவும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் பெறவும் எல்லாம் வல்ல வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர பெருமானின் ஆசி கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின் றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்"

ஈசான சிவாசாரியார்
**சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ.விக்னேஸ்வரக் குருக்கள்,**
மேற்படி தேவஸ்தான பிரதம குருவும்
மகோற்சவ குருவும்.

### தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துபவர்கள்

**உமாஸ்ரோஸ்** புதினப்பத்திரிகை விநியோகஸ்தர், சகல விதமான பழவகைகள், பூசைக்குரிய அர்ச்சனைச் பொருள்கள், பழரசங்கள், குளிர்பான வகைகள் நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**கௌரி பான்சிகவுஸ்**
அழகு சாதனப் பொருள்கள், பாடசாலைப் பிள்ளைகளுக்கான பொருள்கள், வீளையாட்டுப் பொருள்கள் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ தாமோதர விலாஸ்**
சைவ உணவகம்
சகல விதமான உணவு வகைகள் குறித்த நேரத்தில் ஓடருக்கு பெற்றுக்கொள்ளலாம்.
சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**நிரோசன் சைவ உணவகம்**
சகல விதமான உணவு வகைகள் குறித்த நேரத்தில் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
486, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

**கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்**
சுத்தமான தயிர், மோர், நெய், தாம்பூல வகைகள், சுவையான ரீடா, சுவையான பழக் கலவைகள் பெற்றுக் கொள்ளலாம்.
சிவன்கோயிலடி, யாழ்ப்பாணம்.

**சண்முகம் சைவ உணவகம்**
தரமான, சுவையான காலை, மதியம், மாலை உணவுகள் ஓடருக்குக் குறித்த நேரத்தில் கொடுக்கப்படும்.
சிவன்கோயிலடி, யாழ்ப்பாணம்.

**சிவாஸ் நகையகம்**
ஓடர் நகைகளை 22 கரட் தங்கத்தில் குறித்த காலத்தில் குறித்த நேரத்தில் செய்துதரப்படும்.
08, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**றஞ்சனாஸ்**
போட்டோ பிரதிகள், கிளீன்காட் வேலைகள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
383, கே. கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.

**யது றப்பர் முத்திரை**
பிளாஸ்ரிக் பெயர், விலாசங்கள், விளம்பரங்கள், நம்பர் பிளேற் வகைகள் விரும்பிய டிசையின்களில் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
கே. கே. எஸ் றோட்,யாழ்ப்பாணம்.

**பிள்ளையார் நேரசுப் பதிப்பகம்**
சகல விதமான ஒவ்செற் பிறிண்டர்களுக்கு நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.
356, சிவன் கோயிலடி, கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**
பாடசாலை உபகரணங்கள், ஸ்ரேசனறிப் பொருள்கள், பாடப்புத்தகங்கள் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**ரட்ணாஸ்** வைண்டிங் அன் மோட்டோர்ஸ்
சகல விதமான வைண்டிங் வேலைகளும் பான் மோட்டர், கிறைண்டர் ஆகியவற்றின் திருத்த வேலைகளும் உதிரிபாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
530, கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம்.

**கிருஸ்ணா நகை மாளிகை**
சகல விதமான நகைகளும் 22 கரட் தங்கத்தில் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
கிளை: கிருஸ்ணா அடைவுகடை
09, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம்.

**TRACTOR SPARES**
IN PORERS AND DEALERS
IN TRACTOR SPARE PARTS
07,KANNATHIDDY ROAD,
JAFFNA.

**சே. சுதாகர்**
சகல விதமான பழவகைகள், அர்ச்சனைப் பொருள்கள் யாவும் நியாய விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

**தவம் களஞ்சியம்**
சகல விதமான பழவகைகள், மரக்கறி வகைகள், அர்ச்சனைப் பொருள்கள் நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



HAPPY BIRTHDAY 03 08 2008

## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் உமாநாத்

ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட
**உதயகுமார் சோதீஸ்வரி**
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**உமாநாத்** இன்று (03.08.2008) ஞாயிற் றுக்கிழமை தனது மூன்றாவது பிறந்த தினத்தை சுவிற்சர்லாந்தில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண் டாடுகின்றார். இவரை சுவிற்சர்லாந்தில் உள்ள அன்பு அப்பா, அம்மா, ஆவரங்காலில் வசிக்கும் அப்பம்மா, கெருடாவிலில் வசிக்கும் அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், அன்ராமார் மற்றும் கனடாவில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், சுவிஸில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், நியூஸிலாந்தில் வசிக் கும் அத்தை குடும்பம், அப்பப்பா குடும்பம், வவுனியாவில் வசிக்கும் அத்தை குடும்பம், ஆவரங்காலில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், குட்டிச் சித்தப்பா குடும்பம், அத்தை குடும்பம், மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் ஆவரங்கால் ஞானவைரவர் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: **அப்பம்மா**
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

### 'பற்றிக் பிறிண்டிங்' விற்பனையும் கண்காட்சியும்

வட மாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செய லகம் இன்று ஞாயிற் றுக்கிழமை 'பற்றிக் பிறிண்டிங்' கண் காட்சியையும் விற்ப னையையும் நடத் தவுள்ளது.

நெல்லியடி தடங் கன் புளியடி முருக மூர்த்தி ஆலய திரு மண மண்டபத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் காலை 9 மணி தொடக்கம் பிற் பகல் 12.30 மணிவரை கண்காட்சியும் பிற் பகல்ஒருமணிதொடக் கம் பிற்பகல் 2 மணி வரை விற்பனையும் இடம்பெறவுள்ளன.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலை மையில் நடைபெற வுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேல திக அரச அதிபர் ஆ. சிவசுவாமியும் சிறப்பு விருந்தினராக தொழிற்றுறைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் ப.ராகவனும் கலந்து கொள்வர். (202-70)




## சின்னமடு புனித செபமாலை மாதா திருவிழா

சின்னமடு மாதா திருவிழா நாளை மறுதினம் ஆவணி 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஆயர் அதி.வண.
**இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
தலைமையில் கூட்டுத்திருப்பலி இடம்பெறும்.
(பயண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்)
தங்கு வசதி உண்டு.

பரிபாலகர்
**அருட் திரு.போ.அ.அருள்தாசன்.**
(76839)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 . 06 . 1915 |  | 16 . 08 . 2007 |

### திருமதி மகேஸ்வரி நடராசா

திதி: திருதியை (03.08.2008)

இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல் லத்தில் நடைபெறும் அவரின் ஓராண்டு நினைவு அஞ் சலி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின் றோம்.

A.V.Road, அரியாலை. (76809)
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மகோற்சவகாலப் பொதுக்கூட்டம் அறிவித்தல்

இடம்: தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க பணிமனை
காலம்: இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.00 மணி

இந்துஇளைஞர் சங்க உறுப்பினர் அனைவரும் தவறாது கூட்டத்தில்ள கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இணைச் செயலாளர்கள்,**
**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.**
(A54000)

**வீடு வாடகைக்கு**
யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு: 222 2859
(76803)

**ENGLISH / ஆங்கிலம் / SINHALA / சிங்களம்**
சகல மொழிபெயர்ப்பு/கடிதங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுகதை சொல்லப்போறோம்...

★ இளமையில் கறுப்பி நான். வயது போய் விட்டால் வெள்ளச்சி. நான் யார்?

*தலைமுடி*

★ ஆயிரம் பேர்கூடி ஓர் இனிப்பான சிறிய வீடு கட்டுகிறார்கள். அது என்ன?

*தேன்கூடு*

★ சாந்தமலையோரத்தில் இருவர் நெருங்கி இருக்கின்றனர். அவர்கள் யார்?

*கண்கள்*

★ அழகான தோட்ட வேலியிலே சிவப்புத் தோரணம். அது என்ன?

*கொவ்வைப்பழம்*

★ மிகப் பரந்த முற்றவெளி. ஆனால் விளையாட இடமில்லை. அது என்ன?

*வானம்*

★ இவனுக்குக் கிட்டப் போனால் சாவது உறுதி. ஆனால் உலகிற்கு ஒளி. கிட்ட வரமாட்டான். இவன் யார்?

*சூரியன்*

★ தாய் வெளியிலே, மகள் வீட்டினிலே. தாய் மாட்டிற்கு உணவாவாள். மகள் மனிதனுக்கு உணவாவாள். இவர்கள் யார்?

*வைக்கோல், நெல்*

★ முத்துமுத்தாய் தோரணம் ஓடுது தரையிலே. அது என்ன?

*மழை*

★ ஓடியும் வருவாள், உருண்டும் வருவாள். அவள் யார்?


*அலை*

★ வட்டவடிவ அழகி. தண்ணீரிலே வாழும் அழகி. வதங்கினால் வந்திடுவாள் பந்திக்கு. அவள் யார்?

*தாமரை இலை*

**டினேஜா பயஸ்**
தரம் 6,
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

# பொது அறிவு



★ இலங்கையின் பிரதான இயற்கைத் துறைமுகம்? - **திருகோணமலை**

★ இலங்கையிலே இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்? - **அகலவத்தை**

★ துவிச்சக்கரவண்டியை கண்டு பிடித்தவர் யார்? - **கே. மாக்கிமக்மிலன்**

★ மூக்குக் கண்ணாடி முதலில் அறிமுகமான நாடு? - **இத்தாலி**

★ ஜேர்மனியின் தேசியப்பறவை எது? - **வெள்ளைக் கொக்கு**

★ அமெரிக்காவின் தேசியப் பறவை எது? - **கழுகு**


★ இந்தியாவின் தேசியப் பறவை எது? - **ஆண்மயில்**

★ உலகிலே உயர்ந்த மலைச்சிகரம் எது? - **எவறெஸ்ற்**

★ உலகிலே பெரிய தீவு? - **கிறீஸ்லாந்து**

**து.பிரியங்கா**
தரம்-6
யா/மகேஸ்வரி வித்தியாலயம்.

# பிரிவு



மழையின் போது தான்
குடையின் அருமை தெரியும்
பிரிவின் போது தான்
நட்பின் அருமை புரியும்
பாடசாலையில் நான்கு சுவருக்குள்
நாம் வளர்த்தெடுத்த நட்பின் பிரிவுகள்
சில நிமிடம் கண்ணீரில் விடை பெறும்
பிரிவுகள் பதில் தெரியாத பல்தேர்வு வினாக்கள்

**கோ.கீர்த்தனா, தரம் 11A**
யா/சென் மேரீஸ் வித்தியாலயம்.

# பார் போற்றும் உத்தமர்கள் ஆசான்களே!

*எண்எழுத்துக் கற்பித்து எம்மையெல்லாம்
ஏற்ற முறச் செய்கின்ற உபாத்தியாயர்
கண்ணியஞ்சேர் குருவாவார் - எங்கள் வாழ்வின்
கண்களெனப் போற்றி நிதம் வாழ்த்திடுவோம்.*

*வேதனத்தைப்பாராது - எங்கள் வாழ்வின்
விடிவுக்காய்பாடுபடும் ஆசான்கள்
சீதனமாய்க் கல்விதனை எமக்களித்தார்
சிந்தையிலே அவர் புகழைத் தேக்கிவைப்போம்*

*அறிவு படைத்திட்ட உயிர்கட்கெல்லாம்
அகர முதல் எழுத்ததனை அறியச் செய்து
நூலறிவு பலதந்த இவர்கள் வாழ்வு
நூறாண்டு காலமென இனிது வாழ்க*

*வித்தை பல கற்பித்து எங்கள் வாழ்வின்
விடிவிளக்காய்த் திகழ்கின்ற அறிவு மேதைகள்
நித்தம் நித்தம் கலைவளர்த்தார் - இவர்கள் வாழ்வு
நிம்மதியாய் என்றென்றும் நீடு வாழி*

*அள்ளவள்ளக் குறையாத கல்விச் செல்வம்
அளித்திட்ட ஆசிரியத் திலகம் என்றும்
வள்ளலென விளங்கிடுவார் - மாணவர்க்கு
வற்றாத கல்வியறிவு ஊட்டி வாழ்வார்*

*புத்தகங்கள் பலதிறந்து போதித்தெம்மை
புகழடையச் செய்திட்ட புண்ணியர்கள்
வித்தகராய் விளங்கிடுவர் - இந் நாட்டின்
வித்து அவர் விண்புகழ் வாழி வாழி.*

**இராஜேஸ்வரன் ரிஷிதா, A\L2009,**
**கலைப்பிரிவு, நயினாதீவு மகா வித்தியாலயம்.**

# அழிவுக்கு வித்திடும் போதைப்பொருள்கள்

இன்றைய உலகில், சமகால மானிடர் குறிப்பாக மாணவ சமுதாயம் எதிர்நோக்கும் எதிர்க்கணியப் பெறுமானம் உள்ள பிரச்சினையாக போதைப்பொருள் பாவனை காணப்படுகிறது. இப் போதைப்பொருள்கள் ஆரம்பத்தில் தனியாள் பிரச்சினையாக இருந்தது. பின்னர் நாளடைவில் இது சமூகப்பிரச்சினையாகத் தலை தூக்கி நிற்கிறது.



ஆரம்பத்தில் சிலபோதைப் பொருள்கள் மக்களால் மருத்துவத் தேவைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், பிற்காலத்தில் மருட்சி நிலை, நடத்தை மாற்றம், கானல்நீர் காட்சி போன்றவற்றை ஏற்படுத்துவதாக மக்கள் அறிந்து கொண்டனர்.

குறிப்பாக கஞ்சா, அபின், கொக்கைன், கெரோயின், மதுசாரம், புகையிலை போன்றவற்றைப் போதைப் பொருள்களாகக் குறிப்பிடலாம். இத்தகைய போதைப் பொருள்களைப் புகைத்தல் ஊடாகவும், பொடியாக்கி மூக்கினூடாகவும், உணவு மூலமும், ஊசிகள் மூலமும் மனிதர்கள் உள்ளெடுக்கிறார்கள்.

இவ்வாறு போதைப்பொருள்களைப் பாவிப்பதன் மூலம், உடல் ஆரோக்கியம் குன்றும். குறிப்பாகப் பசியை இழத்தல், மலச்சிக்கல் ஏற்படல், மயக்கம், உளப்பூரிப்பு, கிளர்ச்சியூட்டல் போன்றன ஏற்படும்.

அதுமட்டுமல்லாமல் போதைப்பொருள் பாவிப்பதனால் மனிதன் தன் நினைவை மறந்து பல்வேறு தீய செயல்களில் ஈடுபடுகிறான். அதுமட்டுமா? தனது உடைமைகளை விற்று, போதை வஸ்துவை வாங்கும்நிலைக்குத்தள்ளப்படுகிறான். அதோடு இவ்வஸ்துகள் அவனை அணு அணுவாகக் கொலையும் செய்கின்றன. அவன் போதை வஸ்துவை பாவிக்காமல் விட்டாலும் அவனது உடல் அதை ஏற்பதில்லை. இதையே

"மதுவை மனிதன் குடிக்கிறான்
பின் மது மதுவைக் குடிக்கிறது
இறுதியில் மது மனிதனைக் குடிக்கிறது"

என்று ஒரு சீனப் பழமொழி கூறுகிறது. மனிதன் தனது கௌரவத்தைக் கூட இதற்காக இழக்கிறான்.

இத்தகைய போதைவஸ்துவை அரசு வருமானமாகவும், சட்டம் குற்றமாகவும், சமூகம் விருந்தாகவும் பார்க்கிறது. எனவே ஒரு நாட்டையே நிலைகுலையச் செய்யும் இப்போதைப் பொருள்களைத் தடுப்பது அவசியமானதாகும்.

இதற்காக அரசு 1948 இல் தேசிய பயங்கரவாத போதைவஸ்து கட்டுப்படுத்தும் சபையை உருவாக்கியது. அதோடு திரைப்படங்கள், நாடகங்கள், பிரசாரங்கள், கல்வியறிவூட்டல் போன்றவற்றின் மூலமும் போதைப்பொருள் பாவனையைத் தடுக்கலாம்.

போதைவஸ்தை தடுப்பதனால் நாட்டின் செல்வங்களாகிய மக்களும், எதிர்கால தலைவர்களாகிய இளைஞர்களும், சிறுவர்களும் தமது வாழ்வை சிறப்பாக அமைத்து இந்த விஞ்ஞான உலகை விந்தைமிகு உலகாக மாற்றுவார்கள்.

**பா.கௌதமி, தரம் 11 D,**
**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.**

# திருந்திய மீனா

காட்டை அண்டிய பிரதேசமான புலியூரில் இராசையா என்பவர் இருந்தார். அவருக்கு ஒரேயொரு மகள் இருந்தாள். அவளின் பெயர் மீனா. மீனா பிறந்த போதே அவள் தாய் இறந்துவிட்டார். அதனால் இராசையா மகளை செல்லமாகவே வளர்த்தார். இதனால் அவள் யார் பேச்சையும் கேட்காமல் அடங்காப் பிடாரியாக இருந்தாள். புலியூர் வியாபாரிகள் காட்டிற்குச் சென்று நாவற்பழம் எடுத்து வந்து வியாபாரம் செய்தனர். அக் காட்டில் ஒரு கரடியும் இருந்தது.

மீனாவிற்கு அப்பொழுது பத்து வயது. அவள் யார் கூறியும் கேட்காமல் காட்டிற்கு நாவற்பழம் பொறுக்கச் சென்றாள். அவளுடன் சென்றவர்கள் கீழிருந்த நாவற்பழங்களை எடுத்துக் கூடைக்குள் போட்டனர். மீனா மட்டும் மரத்தில் ஏறி நாவற்பழங்களைப் பிடுங்கினாள். அப்பொழுது கரடி வரும் சத்தம் கேட்டது. எனவே திரும்பிச் செல்வதற்கு மீனாவையும் அழைத்தனர். அவள் தான் வரமாட்டேன் என்று கூறிவிட்டு பழங்களை பிடுங்கி உண்டுகொண்டிருந்தாள்.



கரடி கிட்ட வந்தவுடன் அனைவரும் ஓடிவிட்டனர். அது மீனாவை பிடித்துக்கொண்டு சென்றது.

தப்பித்து சென்றவர்கள் இராசையாவிடம் சென்று கூறினர். அவர் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு நாவல் மரத்திற்குச் சென்றார். அங்கிருந்த கரடியின் காலடிச் தடத்தைப் பின்பற்றி சென்றார். அவர் ஒரு குகையை சென்றடைந்தார். குகையில் அழுகுரல் கேட்டது. உள்ளே சென்றார். அங்கு மீனா இருந்தாள். அவளை அழைத்துக் கொண்டு புறப்படும் போது கரடி வந்துவிட்டது. உடனே அவர் துப்பாக்கியால் கரடியை சுட்டு வீழ்த்தினார். கரடி இறந்து விழுந்தது.

பின்பு மீனாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். வீட்டிற்கு வந்து "நீ யார் சொல்லையும் கேட்காமல் நடந்ததால் வந்த வினையை பார்த்தாயா?" என்று கோபமாகக் கூறினார். அன்றிலிருந்து மீனா மற்றவர் சொல்லும் அறிவுரைகளை கேட்டு நடக்க ஆரம்பித்தாள்.

**பா.துவாரகன், தரம் 8 D, சென்.ஜோன்ஸ் கல்லூரி.**





# மாணவர் தூரிகை



**ந.பிரதீபா**
தரம் 9B,
யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரி.

# இலங்கையின் பிரதான உற்பத்தி நிலையங்கள்-அமைந்துள்ள இடங்கள்

1. தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கல
2. பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் - சபுஸ்கந்த
3. சிமெந்து தொழிற்சாலை நிலையம் - காலி, புத்தளம், காங்கேசன்துறை
4. ரயர், ரீயூப் தொழிற்சாலை - களனி
5. இரும்புருக்கும் தொழிற்சாலை - ஒறுவல
6. வைத்திய ஆராய்ச்சி நிலையம் - கொழும்பு
7. நெல் ஆராய்ச்சி நிலையம் - மகா இலுப்பல, பதல்கொட, கிங்குராகொட
8. ஓட்டுப்பலகைத் தொழிற்சாலை - ஜின்தோட்ட
9. பிரிமா ஆலை - திருகோணமலை
10. உப்பு உற்பத்தி நிலையம் - லுணுவில

**சு.நர்மதன்;**
A/L ... பிரிவு,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

# நீங்களும் எழுதலாம்

**மாணவர்களே!**

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமா கும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

*இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.*

.................... ..............................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி பொன்னுத்துரை

*(இளைப்பாறிய அதிபர், அ.மி.த.க. பாடசாலை, மட்டுவில் தெற்கு)*



சாவகச்சேரி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சின்னத்தம்பி பொன்னுத்துரை 18.07.2008 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் நாகம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி–தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பி ஐயாவின் அன்புச் சகோதரரும் வேலாயுதபிள்ளையின் (ஆஸ்திரேலியா) அன்பு மைத்துனரும், சிவசாந்தினி (பிரான்ஸ்), வசந்தினி (கனடா), சிவகுமார் (ஜேர்மனி), சிவசக்தி (கனடா), சிவதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராஜா (பிரான்ஸ்), பாலசுந்தரம் (கனடா), கலைச்செல்வி (ஜேர்மனி), ரவிச்சந்திரன் (கனடா), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுலா, மஹீதன், ஆரண்யா, ராஜ், ராகுல், நிலோஷா, மதுஷா, சுபன், தயானி, தர்ஷி, அபிஷன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.07.2008 செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14, Earlton Road, Scarborough on Mit 2 R3
Canada. T.P: 001 - 4163328487.

*தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

# மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1979 ஆம் ஆண்டு, பூரட்டாதி 3 ஆம் பாதம், கிரக பாவம் 60, செவ்வாய்க் குற்றமற்ற, பட்டதாரி ஆசிரியைக்கு கணக்காளர், பொறியியலாளர், டாக்டர் அல்லது அரச உயர் பதவி வகிப்பவர் தரத்திலான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். திருமணப் பொருத்துநர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: விளம்பர இல. 3121

# திருமண சேவை

சுலபமான மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த சுயதெரிவு முறை முன்னோடி தனிமனித நிறுவுநர் சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்ளுக! தொலைபேசி: 2360488, 2360694, 4873929

# பாடசாலைகளுக்கான தேசிய அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைக்குரிய தேசிய அடையாள அட்டைகள் மாவட்டச் செயலகத்திற்கு கிடைத்துள்ளன. இவற்றை பாடசாலை அதிபர்கள் மாவட்டச் செயலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் அறிவிக்கின்றார்.

# விற்பனைக்கு

*வீட்டுக்குத் தேவையான தீராந்திகள், ஓடு, மரங்கள், கதவுகள் நிலைகள், யன்னல் நிலைகள் மற்றும் பொருள்கள் விற்பனைக்குண்டு.*

*தொடர்பு: 127, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (மக்கள் வங்கி அருகில்)*

# விற்பனைக்கு

8 அடி விட்டமுள்ள Dish அன்ரனா, றிசீவர், Sony T.V., Toshiba குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்குண்டு

தொடர்பு: கே.சோதிநாதன், நாயகி மில், கோகுல வீதி, அன்னங்கை, கோண்டாவில் வடக்கு. தொ.பே: 021 4591659.


உங்கள் பிள்ளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகிறாரா?

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

இதோ! அரிய சந்தர்ப்பம் உங்கள் கணக்கு மீதி இரட்டிப்பு



அப்படியானால், ஒவ்வொரு பாடசாலையிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பணப்பரிசில்கள் உங்கள் குழந்தைக்கும்.

முதலாம் இடம் ரூபா 10,000/-
இரண்டாம் இடம் ரூபா 7,500/-
மூன்றாம் இடம் ரூபா 5,000/-

அத்தோடு, உங்கள் குழந்தை மாவட்டத்தில் முதல் இடத்தில் சித்தியெய்தால் அவனது / அவளது அருணலு கணக்கு மீதி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும். (அதிகூடிய தொகை ரூபா. 50,000/-க்கு உட்பட்டதாகும்).

- இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் திகதியன்று, உங்கள் குழந்தையின் பெயரில் உள்ள அருணலு சிறுவர் கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- கணக்கு மீதியை பேணுவது மட்டுமே.
- இதுவரையில் உங்கள் பிள்ளையின் பெயரில் அருணலு கணக்கு ஒன்று ஆரம்பித்து இருக்காவிடில் தாமதிக்காமல் அருகே உள்ள கொமர்ஷல் வங்கிக்கு விரையுங்கள்.
- அர்ப்பணிப்புடன் கற்று அதிகம் வெல்லுங்கள். அருணலு பாதையில் உங்கள் குழந்தையையும் வழிநடத்துங்கள்.

அருணலு
சிறுவர் சேமிப்புக் கணக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் கே.எஸ்.ஆனந்தன் என்று அறியப்படும் கார்த்திகேசு சச்சிதானந்தன் அவர்களும் ஒருவர். ஈழத்தின் பத்திரிகைகள் அனேகமானவற்றிலும் தமிழகத்தில் இருந்து வெளிவரும் கல்கியிலும் சுமார் 75 சிறுகதைகளை எழுதியுள்ளார்.

சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் என்ற பல்துறை சார்ந்த ஆக்க இலக்கியங்களை கே.எஸ்.ஆனந்தன், பிறை சூடன், யாழ்.ஜனார்த்தனன், கண்ணன் என்ற புனைபெயர்களில் நிறையவே படைத்தவர்.

நாவல்கள் இவரது சிறப்புத் துறை. சிறுவர் நாவல்கள், மர்ம நாவல்களும் எழுதியுள்ளார். 28 நாவல்களை இதுவரை படைத்துள்ளார். 'சிந்தாமணி'யில் வெளிவந்த ''இதய மலர்'' சமூக நாவல் மிக நீண்டது. பன்னிரெண்டு நாவல்கள் இதுவரை நூல்களாக வெளிவந்துள்ளன.

இவர் எழுதிய முதலாவது சிறுகதை ''அம்மா வேண்டும்'' வீரகேசரியில் வெளிவந்தது. தமது ஆத்ம திருப்திக்காகவே ஆக்க இலக்கியங்களைப் படைப்பதாகவும் அவற்றைப் புத்த வடிவில் கொண்டு வருவதில் ஆர்வம் இல்லை என்றும் கூறுகிறார். இப்போதும் ஏனைய துறைகளை விட நாவல்கள் எழுதுவதையே விரும்புவதாகக் கூறுகிறார். தமது 68 ஆவது வயதிலும் இப்போதும் நாவல்களைப் படைக்கிறார். பரந்த வாசகர் பரப்பைக் கொண்டவர்.

சுதந்திரன் பத்திரிகையில் அவர் எழுதிய ''கோழைகள்'' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

# கோழைகள்
## (சிறுகதை)

சிலர் அவளை நவீன நல்லதங்காள் என்று சொல்லிக் கொண்டனர். சிலர் அவளை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டித் தீர்த்தனர். அவை எதையும் பொருட்படுத்தும் நிலையில் அவள் இருக்கவில்லை.

ஊரே திரண்டு கூடிவிட்டது. நிமிடத்துக்கு நிமிடம் அயல் ஊர்களிலிருந்தவர்கள் கூடக் கேள்வியுற்று வண்டிகளில் வந்து கொண்டிருந்தனர். இத்தனை பேரையும் பார்க்க அவள் கொடுத்து வைக்கவில்லை. அவள் வாழ்ந்தபோது திரும்பிப் பார்க்காத சனங்களெல்லாம் தங்கள் அவசர சோலிகளையும் ஒத்திப்போட்டுவிட்டு ஓடோடியும் வந்து இராசாத்தியையும், பிள்ளைகளையும் பார்க்கத் துடித்தனர்.

பொலிஸ் மரியாதைகள் , விதானை, உடையார், விசாரணை அதிகாரி உட்பட ஊரில் பெரிய பிரமுகர்கள் எல்லோரும் அங்கு கூடியிருந்தனர்.

இராசாத்தி பிறந்த போது எப்படிப் பேசத் தெரியாதவளாக இருந்தாளோ அப்படியே வளர்ந்து பெரியவளான போதும் பேசாமடந்தையாக விருந்தாள். பேசத்தெரியாத அந்த ஜன்மத்தை நொண்டியாகவோ, குருடாகவோ அல்லது அசிங்கமாகவோ படைத்திருக்கப்படாதா இந்தக் கடவுள்? கொள்ளை அழகு. பெண்களே அவள் அழகைக் கண்டு பொறாமை கொள்ளும் அளவுக்கு அவளது அங்கலாவண்யங்களின் வளர்ச்சி அளவோடும், அழகோடும் விளங்கின. எந்தக் கோணத்தில் நின்று நோக்கினாலும் அவளது அழகுருவம் பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும் பேரெழில் படைத்துத் துலங்கியது. பிறந்ததுதான் பிறந்தாள் ஒரு பணக்கார வீட்டில் பிறந்திருக்கக் கூடாதா?

அழகுள்ள உடலையும், தன் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளையும் வெளியிட முடியாத வாயில்லாப்பூச்சியாக வறுமையின் கோரத்தாண்டவம் நிலவும் ஒரு குடும்பத்தில் மூத்த பெண்ணாகப் பிறந்து விட்டாள். பிறந்த போது அவளது பெற்றோருக்கு உள்ள மகிழ்ச்சியின் பிரவாகத்தில் தமது நிலைமைக்கு மேலான ஒரு பெயரை இராசாத்தி என்று சூட்டியும் விட்டனர்.

வாய் பேசாத்தன்மையாலோ என்னவோ அவள் உடலின் வனப்புச் சக்தி மேம்பட்டு மின்னியது. அவள் உடலைக்கண்டு பல்லிளித்து சொந்தங் கொண்டாட முயன்ற பலர் அவள் வாயில்லாப் பூச்சி என்று தெரிந்ததும் அடுத்த வார்த்தை பேசாமல் ஓட்டமெடுத்தனர்.

படைத்தவன் படியளப்பான் என்பார்கள். மானுடங்களை ஆட்டுவிக்கும் ஒரு சூத்திரதாரியான ஓர் அருவசக்தி, மக்கள் நம்பிக்கையைப் பெற்ற சக்தி அந்த ஊமைக்கும் ஓர் துணையைக் கொடுக்காமல் விட்டு விடுமா என்ன?

காலத்தின் சுவடு அவள் கன்னித்தன்மைக்கு மெருகு பூசிக்கொண்டே வந்தது. ஞானியும் தன்னிலை இழந்து தவிக்கும் எழில் அவள் சொத்தாகவிருந்தது. அவளது கொள்ளை அழகைக் கொஞ்சும் உரிமை ஒரு நொண்டிக்குக் கிடைத்தது.

துருவ வாழ்க்கை வாழும் இருவரைக் காலம் தன் கரங்களால் வாரி அணைத்து ஒன்று சேர்த்து உள்ளத்தால் ஒருவராக இணைந்து வாழும் உரிமையை ஏற்படுத்தி விடுகின்றது. இதற்குப் பெயர் சட்டரீதியாகவும், சம்பிரதாயமாகவும் திருமணம் என்றால், அழகுப் பதுமையான ஊமையும், நொண்டி இராசையாவும் ஒன்று சேர்ந்ததும் திருமணத்தால்தான்.

அந்தத் திருமணத்தரகனான முத்தையாவுக்கு நொண்டியும் இராசாத்தியின் தகப்பனும் சேர்ந்து கொடுத்த தொகை ரூபா நூறு என்றால் அந்தளவு கூட அவர்கள் திருமணத்துக்குச் செலவு செய்யப்படவில்லை. இராசையாவும் இராசாத்தியும் ஒன்றாக இருந்து உணவு உண்ணுமுன்பு மஞ்சள் முடிந்து ராசாத்தியின் கழுத்தில் கட்டினான் இராசையா. பொழுது சாயும் வேளையில் நடைபெற்ற இத்திருமண விபரம் மறுநாட் காலையிலே தான் அந்தப் பகுதிக்குப் பரவியது.



கல்யாணம் நடந்த தினத்தன்றே அந்தக் கலியாண மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாமல் தனியாய் கொதித்துக் கொண்டிருக்கும் உணர்வுகளோடு போராடிக் கொண்டிருந்தான் இராசையா. அத்தகையதோர் நிர்க்கதியான நிலைமை குறித்து இராசாத்தியும் வருந்துகிறாள் என்பதைஉணர்ந்தவுடன் அவள் மீதிருந்த மோகம் பன்மடங்கு பெருகியது. அவள் உள்ளத்துள்ளே கனத்து நிற்கும் ஆழமான சிந்தனையும் - மனப் போராட்டமும் வானத்தில் மழையிருள் அடிக்கடி மாறியோடுவது போன்று பல்வேறு விதமாக மாறுபடும் தன்மையை அவள் அழகு முகத்தில் பார்த்தபோது திருமணமான முதலிரவென்றாலும் இயற்கையின் நியதிக்குக் கட்டுப்பட்டு இரண்டு மூன்று நாள்கள் அவர்கள் விலகியே இருந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க....)

# பசிக்கிறது என்பதற்காக அவசரமாகச் சாப்பிடாதீர்கள்

பண்டைக் காலத்தில் நமது அருளாளர்கள் சிவனடியார்களுக்கு உணவு அளித்து மகிழ்விப்பதைப் பெரும்பேறாகக் கருதினார்கள். பிறருக்குக் கொடுத்த பிறகே மீதம் இருந்ததைத் தங்கள் உணவாகக் கொண்டார்கள். உணவு வேண்டி வீட்டுக்கு வந்தவர்களை பக்தி சிரத்தையோடு மகேஸ்வரர்கள் என அழைத்து அவர்களுக்கு உணவளித்து மகிழ்ந்தார்கள். இளையான் குடி மாறநாயனார், சிறுத்தொண்டர் போன்றோரின் வரலாறுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. இந்நாள்களில் ஆலயங்களில் வழங்கப்படும் அன்னதான நிகழ்வு ஆண்டவனுக்கு அளிக்கப்படுவது என்ற பொருளில் மகேஸ்வர பூசை என்ற பெயரால் அழைக்கப்படுவதை நாம் அறிவோம்.

'ஆர்க்கும் இடுமின்' என்பது திருமூலர் வாக்கு. கொடுப்பதில் தகுதி தராதரம் பார்ப்பது தவறு. யார் வந்தாலும் நம்மால் இயன்றவரை கொடுக்கும் மனப்பான்மை வரவேண்டும்.

சிவனடியார்களுக்கு உணவு படைத்து அவர்களது பசிபோக்கி மகிழ்வதை வழக்கப்படுத்திக் கொண்டிருந்த கலிக்கம்பநாயனார் என்ற அருளாளர் ஒரு நாள் தனது இல்லத்தில் அடியார்களை மரபுப்படி உபசரித்து வந்தபோது, முன்னர் அவரிடம் வேலை செய்து, பின்பு துறவியாகி இறை தொண்டு செய்து வந்த அடியார் ஒருவர் அமுது உண்ண வரிசையில் அமர்ந்திருந்தார். அவரை அடையாளம் கண்டு கொண்ட கலிக்கம்பரின் மனைவியார் அவர் முன்னர் தம் வீட்டில் வேலை செய்தவர் என்பதால், அவருடைய பாதங்களை நீரால் கழுவிடத் தயங்கினார். அது கண்டு பெருங் கோபம் கொண்ட கலிக்கம்பர் சிவனடியார்கள் எவரானாலும் அவர்களை வழிபட்டு, உபசரித்து, உணவளிப்பதும் சிவபக்தர்களது பொறுப்பாகும் எனக் கூறி, சிவனடியாரை ஏதோ காரணமொன்றைக் காட்டி உபசரிக்கத் தவறிய தமது மனைவியைத் தண்டித்தாராம். அக்காலத்தில் சிவப்பரம்பொருளிடம் தமது மனம், வாக்கு, காயம் என்பவற்றை முற்றாக ஒப் படைத்தவர்கள் அத்தகைய அருளாளப்பெருமக்கள்.

''ஆர்க்கும் இடுமின்'' என்று கூறிவைத்த திருமூலர் அவர் இவர் ''என்னன் மின்'' என்று கூறி வைத்ததும் இதனாலேயே ஆகும்.

## குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்தெடுத்து உண்ணுவது உடல்நலக் குறைவைத் தரும்!

உணவு கேட்டு வந்தவர்களின் பசியைத் தீர்த்த பின்பே சிவனடியார்கள் உணவு அருந்துவார்கள். விருந்தினர் எவரும் வராதவிடத்து தாமே அவர்களைத் தேடிச்சென்று அழைத்து வந்து விருந்தளித்து மகிழ்ந்தனர்.

இப்போதெல்லாம் நம் வீடுகளில் நாம் சாப்பிட்டு, மிஞ்சுவதை குளிர்சாதனப் பெட்டிக்குள் பக்குவப்படுத்துகின்றோம். குளிர்சாதனப் பெட்டிக்குள் பாதுகாக்கப்படும் உணவு வகைகளில் கிருமிகள் வளரவும் வாய்ப்புண்டு. பிறகு ஒருநாள் அவற் றைச் சுடவைத்துச் சாப்பிடுகிறோம்.

'வேலை சுலபமாகிறது' என்றொரு வாதம் இதற்கு முன்வைக்கப்படுகிறது. உடல் நலக் குறைவுக்கும் இது காரணமாகிறது என்பதை நாம் தெரிந்து கொள்வதில்லை. அத்துடன் இறைவன் வேளாவேளைக்குத் தரும் உணவை தேவையுள்ளவர்களுடன் பகிர்ந்துண்பதில் மனநிறைவு கிட்டுகிறதல்லவா? ஆகவே பழைய பொருளைப் போற்றாதீர்! பசிப்பதால் அவசர அவசரமாகப் போய்ச் சாப்பிட்டு விடாதீர்!

'பார்த்திருந்து உண்மின்; பழம்பொருள் போற்றன்மின்' என்பதும் திருமூலர் வாக்கே.

உணவு உண்டதன் முன்னர் காகங்களைக் கூவியழைத்து அவற்றுக்குச் சிறிது உணவை வைத்த பின் தாம் உண்ணும் வழக்கம் சைவசமயிகள் மத்தியில் காணப்படும் மரபு வழிவழக்க மொன்று. நாம் வைக்கும் உணவைக் கண்டு பறந்து வந்து அருகில் அமரும் ஒரு காகம் தனது சுற்றத்தைக் கூவியழைத்து ஏனைய காக்கைகளுடன் சேர்ந்து அவ் உணவைப் பகிர்ந்துண்ணுமேயன்றி, ஒரு போதும் தானே தனித்து அவ் உணவை உண்பதில்லை. இந்த அரிய பண்பையும் திரு மூலர் தமது திருமந்திரத்தின் மூலம் எமக்கு உணர்த்தி வைக்கிறார்.

ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்,
பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்,
வேட்கை உடையீர் விரைந்தொல்லை உண்ணன் மின்,
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே!

காலத்தால் அழியாத உண்மைகளை- பண்புகளை எளிய விதத்தில் மக்களுக்கு எடுத்துரைத்து வழிப்படுத்திய அப் பண்டைக்கால திருமூலர் திருமந்திரத்தின் சிறப்புத்தான் என்னே!★ - திரு

# தலைவனுக்குத் தனது அன்பைச் சொற்களால் கூறாமல் புன்சிரிப்பால் புலப்படுத்திய தலைவியின் நாகரிகம்!

தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு'' என்றார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை. அந்தக் குணம்தான் நாகரிகம். அந்தக் குணம்தான் பண்பாடு. ஒருவன் - ஒருத்தி என்ற உயர்வாழ்வைக் காட்டுவன தமிழ் இலக்கியங்கள். அந்த ஒருவன் ஒருத்தி கூடத் தங்கள் அன்பை ஒருவர்க்கொருவர் புலப்படுத்தும்போது மிக நாகரிகமாகவே புலப்படுத்தினர்.

இக்காலத்திரைப்படங்களும், சிறுகதை இலக்கியத்திற் சிலவும், நாடகங்களிற் சிலவும் தலைவன்- தலைவி காதலைப் புலப்படுத்தும் காட்சியை மிக அநாகரிகமாகக் காட்டுகின்றன. இது தமிழ்ப் பண்பாட்டிற்குக் கேடு விளைவிப்பதாகும்.

தமிழர் வாழ்வை விளக்கும் இலக்கியமாகத் திகழும் திருக்குறள் தலைவன்- தலைவி தத்தம் அன்பைப் புலப்படுத்தும் காட்சியை மிக நாகரிகமாகக் காட்டுகிறது.

தலைவன் ஒருவனும் தலைவி ஒருத்தியும் தனிமையிற் சந்திக்க நேர்கிறது. அவள் ஆடல்மயிலின்சாயல்கொண்ட அழகி. அவனோ ஆடவர்க்கு வேண்டும் அழகெல்லாம் தன்பாற் கொண்ட இயல்பினன்.

அவன் சொற்களைப் பயன்படுத்தாது பார்வையில் காதல் தோன்ற அவளை நோக்கினான். அவள் அந்த நோக்கைப் புரிந்து கொண்டாள். அவளும் சொற்களைப் பயன்படுத்தவில்லை. மெல்லிய ஒரு புன்னகை மூலம் தன் அன்பைப் புலப்படுத்தினாள்.

## தமிழ்ப் பண்பாட்டுக்குக் கேடு சூழாமல் இலக்கியம் படைத்தனர் பழந்தமிழ்ப் புலவர்கள்

''அசையியற்கு உண்டாண்டோர் ஏர் யான் நோக்கப்
பசையினள் பையநகும்''

என்பது அந்த நெஞ்சக் கலப்பை விளக்கும் குறள்.

தலைமகன் குறிப்பைத் தலைமகள் அறிந்த வழியும் கூற்று நிகழாது பெண்மையால் குறிப்புணர்த்தியது என்பதற்கு இளம் பூரணர் இக்குறளைக் காட்டுவார்.

**[illegible]**

அகவாழ்விற் போலவே புறவாழ் விலும் தமிழர் நாகரிகம் போற்றினர்.

உலக சமாதானத்தை விரும்புபவர் திருவள்ளுவர். கொலையை விரும்பாதவர் வள்ளுவர். ஆயினும் தனது நாட்டைப் பகையரசரிடம் இருந்து அரசன் ஒருவன் காப்பாற்றுவதற்குப் படைதேவை என்பதை அவர்அறிந்திருந்தார். அதனால் படை மாட்சி, படைச்செருக்கு என்னும் இரண்டு அதிகாரங்களில் படையின் அவசியத்தை வற்புறுத்தினார்.

நீதி நூல் ஆசிரியராகிய திருவள்ளுவர் நாட்டின் பாதுகாப்பிற்குப் படை தேவை என்று கூறியது புதுமையானது. தனித்துவமான படை தேவை என்பதைக் கூறும் போதும் அவர் தமிழர் நாகரிகத்தை அங்கும் கூறத் தவறவில்லை.

இரு வீரர்கள் அச்சம் என்றால் என்ன என்று அறியாது போரிடுவது சிறப்பானது. அந்தப் போரில் ஒருவன் ஆயுதம் இழந்தவனாகி - அதாவது நிராயுத பாணியாகி நிற்கும்போது ஆயுதம் உடையவீரன் அவனைக் கொல்லாது விடுவது போர்த்தருமம். அது வீரமாக அல்லாது பெருவீரமாகக் கருதப்படுகிறது.

அதனைத் திருவள்ளுவர்

''பேராண்மை என்பதறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு''

என்னும் குறளிற் கூறுவர்.

பகைவர் மேல் இரக்கங் கொள்ளாமல் செய்யும் போரை நூலோர் ஆண் தன்மை என்று கூறுவர். பகைவனுக்கு ஒரு தாழ்வு வரும் போது இரக்கங்காட்டி அவனது தாழ்வை நீக்குவதை நூலோர் பேராண்மை என்று கூறுவர்.

தமிழர் காதல் வாழ்விலும் நாகரிகத்தை மேற்கொண்டனர். போர் வாழ்விலும் நாகரிகத்தை மேற் கொண்டனர்.

அகத்தும் புறத்தும் நாகரிகத்தைப் பேணியதமிழர், உலக முதன் மொழியாகிய தமிழின் சொந்தக்காரர் ஆயினர். உலகின் உயர்ந்த பண்பாட்டின் சொந்தக்காரரும் ஆயினர்.



புலவர் ம. பார்வதிநாதசிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழைகள்.....

*(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

திருமணம் முடிந்த நாலாம் நாள். முழுகிவிட்டு அள்ளிச்செருகிய கொண்டையுடன், தன்னிலை மறந்த இன்ப நினைவுகளுடன் திண்ணையில் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் கணவனைப் பார்த்தாள் இராசாத்தி. முழுகிவிட்டு வந்ததால் சங்குபோல் பளபளக்கும் அழகான கழுத்தை ஆசையோடு தடவி விட்டான் இராசையா.

மழைச்சாரலினால் ஏற்படும் கிளுகிளுப்பு அவள் உள்ளத்தில் சொல்ல வொண்ணாத சுகந்த நிலையை ஏற்படுத்தியது. மேனி அனலாகக் கனன்றது. ஆனந்த பரவசத்திலாழ்ந்து விட்ட அவள் உள்ளத்தில் வீசிய இன்பச்சாரல் உடலின் சாளரமான விழியின் கடையில் துளிர்த்து பனித்து நின்றன.

அவள் மௌனமே உருவாக பனியில் நனைந்த தந்தச் சிலைபோல நிற்பதைப் பார்த்த இராசையா அவள் முகத்தில் துள்ளும் இன்ப அலைகளை என்னவென்று எண்ணினானோ? அவள் மேனியில் தவழும் தன் கரத்தை வெறித்து நோக்கினான். வறுமையில் உழன்றவளானாலும் மதர்த்து வளர்ந்த பயிர்போல செழுமை நிறைந்த அவள் உடலுடன் அவன் கரத்தை ஒப்பிட்டால்........ பளிங்குக்கும்- இரும்புக்கும் எத்தனை வித்தியாசமோ, அப்படித்தானிருந்தது. திடீரெனக் கையை எடுத்துவிட்டு 'இராசாத்தி' என்றான்.

சொர்க்கத்தில் இருப்பவளைப் பூலோகத்திலிருந்து யாராவது அழைத்தால் எப்படியிருக்குமோ அது போலிருந்தது இராசாத்திக்கு. பேச முடிந்தவர்களே பேச முடியாது தவிக்கும் நிலையில் அவள் இருந்தபோது பேசாமடந்தையான அவளால் என்ன சொல்ல முடியும். உள்ளத்துள் போராடும் உணர்வுகளோடு அவன் கரத்தைப் பற்றினாள்.

'இராசாத்தி.....' நடுங்கும் குரலுடன் அழைத்தான் இராசையா. உறுதியான வலுவடைந்த அவன் கரம்கூட அவளது மென்மையான ஸ்பரிசத்தால் வெடவெட என நடுங்கியது.

குடிசையின் தட்டிக் கதவை அவள் விழிகள் நோக்கின. புரிந்து கொண்டான் இராசையா. அணை போட்டு வைத்திருந்த ஆவல்கள், கற்பனைகள் உடைசல் கண்டு அக்கணமே பிரளயம் போல அவன் உள்ளத்தில் ஒரு பூகம்பமே நடந்துவிட்டது.

பட்டப்பகல். வெளியே சென்றுவிட்ட அவள் பெற்றோர்கள் வந்துவிட்டால் என்ற நினைவு ஏற்பட்டபோது "இராசாத்தி, ஆக்கப் பொறுத்தவள் ஆறப் பொறுக்கக் கூடாதா? உன் ஆத்தையும் அப்பனும் வாற நேரம். உன் உடன் பிறப்புக்கள் கோடிப் பக்கமாக விளையாடுதுகள். வந்து........." என்று இழுத்தான்.

ஆழமான பெண்மையின் உணர்வுகள் கிளர்ந்து பொங்க ஆரம்பித்துவிட்டால் பின் விளைவுகளைப் பொறுத்துத்தான் அது தன்னிலை அடையும். அதுவரை அது அடங்குதல் எளிது அல்ல என்பது ஒரு அனுபவ ரீதியான கண்டு பிடிப்பு. அது மனித வர்க்கம் மட்டுமல்ல ஜீவ உருவெடுத்த எதற்கும் ஓர் இயற்கை நியதியாயிருக்கையில் குடிசையில் பிறந்துவிட்டதற்காக இராசாத்திக்கு இல்லாமல் போய்விடுமா? தவிர ஊமைப் பெண்ணான அவளுக்கு அப்போது எது சொன்னாலும் கேட்டிருக்க மாட்டாள். அவன் கரங்களை இறுக்கமாக அழுத்தி இழுத்தாள்.

அடுத்த கணம் குடிசையின் கதவு திறந்து மூடப்பட்டது. சிருஷ்டிகர்த்தாவின் ஜீவப் படைப்பில் மானுடங்களுக் குண்டான நிறைவற்ற குறைகளையுடைய அவர்கள் பிரபஞ்சத்தின் கருப் பொருள்களாக சிருஷ்டி காரணிகளாக விள ங்கும் போது செயல்முறை நிகழ்ச்சிகளில் குறையின்றி மற்றும் மானுடங்களைப் போன்றே நிறைவுப் பாதையை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். வெளியே பேச்சுக்குரல்கள்- காலரவங்கள். அவை குடிசையின் வாசலை நோக்கிவரும் ஒலி. அவர்களது களிப்புப் பயணத்தின் இடையில் அமங்கலமான ஒரு தடை. இராசாத்தியின் உள்ளம் குமுறியது.

காலத்தின் சுவடுகள் துரித கதியில் இயங்கிக் கொண்டிருந்தன. இராசாத்தியின் பெற்றோர் காலமாகிவிட்டதுடன் அவளுக் குப் பிந்திய இருவரும் எங்கெங்கோ சென்று விட்டிருந்தனர்.

இத்தனை கொடுமைகளும் போதாதென்று அவளும், கணவனும் தமது தாம்பத்திய வாழ்க்கை வயலில் விதைத்த அறுவடையாக இரண்டு குழந்தைகளையும் பெற்றெடுத்தனர்.

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதுபோல அவள் கணவன் நொண்டி இராசையா நோய்வாய்ப்பட்டு இறந்து போனான். காலம் ஊமைப் பெண்ணான இராசாத்தியை நிர்க்கதியாக இரு குழந்தைகளுடன் கலக்கிக் கொண்டிருந்தது.

வேலைக்குத் திரிந்தாள். வேலை கிடைக்கவில்லை. எங்காவது கிடைக்கும் அற்ப பிழைப்பினால் வரும் வருவாயைக் கொண்டு மூன்று வயிற்றை நிரப்ப வேண்டியவளானாள். பேசக்கூடியவர்களே கோழைகளாக வாழ்க்கையில் பேசமுடியாத அவள்......?

அவளுடைய உடற்கட்டு தளர்ச்சியடைந்திருந்தாலும் கண்ணுக்குக் கவர்ச்சியான தோற்றம் காண்பவர்கள் தீய நோக்கத்திற்கு வழிவகுத்தது. அத்துடன் கட்டுக் காவல் இல்லாத பெண். கேட்பதற்கு யாரும் அற்றவள். வாய்பேசமுடியாத மனிதப் பிண்டம்.

அவள் குடியிருந்த குடிசைக்கு சற்றுத்தள்ளி ஒரு வயிரவர் கோயில். வருடத்துக்கொருமுறை வாயற்ற ஜீவன்களைக் கொண்டு வந்து ஆண்டவன் பெயரால் பலியிடும் கொலைக்களமாக விளங்கிய அந்த இடத்துக்குக் கோயில் என்ற பெயரை நிலைநாட்ட ஒரு சூலாயுதம். அதுக்குப் பூசை கூட வருடத்தில் ஒரு முறை. அதற்கென ஒரு பண்டாரம். அந்த ஆசாடபூதி வருடமடைக்கு வரும்போது அந்தப் பேதை ஊமையைப் பார்த்து பல்லிளிப்பான். அவளும் ஓர் வாய் இல்லா ஜீவன்தானே? அவள் பெண்மையைப் பலிகொள்ள அவன் வருடக்கணக்காக துடித்து வந்தான்.

தெய்வம் விரும்பாத பலியை மனிதக் கோழைகள் அதற்குக் கொடுத்து நிறைவேற்றுகின்றார்கள். அதேபோன்று இராசாத்தி விரும்பாத போதும் அவளைப் பலிகொள்ளக் காத்து நின்றான் பண்டாரம்.

இராசாத்தியின் கணவன் இறந்து மூன்றாம் மாதத்திற்குப் பின்பு அந்தக் கோயிலின் வருட மடை வந்தது. அன்று கோயிலுக்கு இராசாத்தி வராத காரணத்தை அறிந்து கொண்டான் ஆசாட பூபதியான பண்டாரம்.

அந்த வருடத்திய வருட மடை முடிந்து விட்டது. அவன் உள்ளத்தில் கொந்தளிக்கும் எண்ணப் பேரலைகளுடன் இராசாத்தியின் வீட்டை அடைந்தான். படையலுக்குக் கிடைத்த பண்டங்களை அந்த ஏழைப்பிள்ளைகளுக்கு வழங்கினான். கோயில் பண்டாரமாச்சே! பயபக்தியுடன் பணிவுடன் நடந்து கொண்டாள் இராசாத்தி.

நடு இரவு. மதுவையும் இறைச்சியையும் உண்ட களிப்பில் ஊரே உறங்கிக் கிடந்தது. பண்டாரத்தின் மனம் பரவசநிலை காணத்துடித்தது. இராசாத்தியின் குடிசைக்கு விரைந்தான். அங்கே இரவின் போர்வையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் இராசாத்தி.

வெறிகொண்ட மிருகம் வசதியாக அவள் மீது பாய்ந்து விட்டது. கத்தவே முடியாத நிலையில் அவன் வெறிக்கு ஆதரவற்ற பெண்மை பலியிடப் பட்டு விட்டது. தடுமாறி எழுந்த இராசாத்தி அந்தப் புண்ணியவாளனைப் பார்ப்பதற்காக அவன் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். அவன் திமிறிப் பறிக்க முயன்றான். மறுகணம் தடுக்கி விழுந்தவன் பேச்சுமூச்சின்றி துடிப்பதை உணர்ந்து கொண்டாள். உடனே எழுந்து தகரவிளக்கை பற்ற வைத்து ப்பார்த்தாள் அங்கே......

வயிரவர் கோயில் பண்டாரம் குருதி கொப்பளிக்கப் பிணமாகக் கிடப்பதைக் கண்டாள். விளக்கை ஏந்தி நின்ற விரல்கள் பதறின. செய்வதறியாது திகைத்து விட்டாள்.

வாயில்லா ஜீவன்களை பலியிடும் கோயிலின் பூசகரான பண்டாரத்தை இராசாத்தி வீட்டில் வைத்திருந்த அரிவாள் பலிகொண்டு விட்டது. திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை என்பார்கள். அந்தத் தெய்வம் அரிவாள் உருவில் கிடப்பதை அறியாத பண்டாரம் அவள் பிடியினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளத் திமிறியபோது, தடுமாறி அரிவாளின் மேல் விழுந்து விட்டான்.

அவள் வாழ்க்கை என்ற பந்தலில் புகுந்து அன்றே இயற்கை சதி செய்தது. அது முடிந்து முதல் இன்பம் பெற விழைந்த போதும் அமங்கலமான தடை தொடர்ந்து வாழ்க்கையில் ஏற்பட்ட புயல் தன் வாழ்வையே முடித்துக் கொள்ளும் அளவுக்கு வந்துவிட்டதை எண்ணிக் கலங்கினாள்.

அவளோ ஊமை, கோழை உள்ளம் படைத்தவர்கள் நிறைவேற முடியாத ஆசைகளோடு மடிந்து விடுகின்றனர். ஆனால் ஊமையாய்ப் பிறந்தாலும் அழகுடன் இருந்தால் வாழலாம் என்று ஆசைப்பட்டாள். நொண்டியுடன் வாழ்ந்தாள். அந்த ஆசை நிர்க்கதியான நிலையில் நின்றுவிட்டபோது அந்த அழகின் ஆபத்தை உணர முடியாதவளாகியிருந்தாள். பண்டாரம் தன்னைப் பலிகொள்ளும்போது தான் தன் அழகு தனக்கே எதிரியான ஒன்றென்று உணரத் தலைப்பட்டாள்.

மெலியாரை வலியார் வருத்த வலியாரைத் தெய்வம் தண்டித்து விட்டது. தெய்வத்தின் தண்டனைக்குள்ளான பண்டாரத்தின் கதையை அவள் யாரிடம் கூறுவாள்? எப்படி என்னவென்று கூறுவாள்? வலியவர்கள் வாழும் சமூகத்தில் மெலியாரின் உண்மை ஏழையாகி விடுமே. அந்தஸ்து பேதம் என்ற கோழைத்தன்மையினால் மறைக்கப்பட்டு விடுமே. தெய்வ நீதியைக் கூட கோழைகளாக ஆனால் வலியவர்களாகத் தோன்றுவோர் திரை போட்டு மூடிவிடுவார்களே. அந்தக் கோழைகள் முன்பேசக்கூடியவர்களே குற்றவாளிகளாகி விடுவார்களே, பாவம், ஊமையான இராசாத்தி..............!

இரக்கமற்ற கோழைகளிடம் இரந்து வாழ்வதைவிட உறுதியுடன் மடிந்து விடுவதென்று கிணற்றில் பிள்ளைகளுடன் விழுந்து தற்கொலை செய்துகொண்ட இராசாத்தியின் உள்ளம் உறுதியானது. மானம் இழந்த பின்பும் சமூகத்தில் கௌரவப்போலியாக வாழும் கோழைகள் ஏராளம். அவர்களிலும் பார்க்க இராசாத்தி உத்தமிதான். உறுதியான உள்ளம் கொண்டவள்தான்.

தற்கொலைசெய்து கொள்பவர்களெல்லாம் கோழைகள் என்றால் சமூகத்தில் நீதி - நேர்மை - உண்மை ஆகியவற்றுக்குத் திரையிட்டு வாழும் கோழைகள்......?

***(நன்றி- சுதந்திரன் சிறுகதைகள்.)***

## சொற்சிலம்பம் - போட்டி இல: 21

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | ■ | |
| 11 | | | ■ | 12 | | 13 | |
| | ■ | 14 | 15 | | ■ | | ■ |
| ■ | 16 | | | ■ | 17 | | 18 |
| 19 | | ■ | 20 | | | ■ | |
| 21 | | | | ■ | 22 | | |

அனுப்புபவர் பெயர்:...........................................

விலாசம்:...........................................

...........................................

கையொப்பம்:...........................................

**இடமிருந்து வலம்**

1. சிறப்பானது என்பதைக் குறிக்கும்.
4. திரவத்துக்கும் திண்மத்துக்கும் இடைப்பட்ட நிலை.
6. ஒரே அளவான/ஒரே மாதிரியான.
7. பருத்து இருப்பதையும் குறிக்கும் வெடிப் பொருளையும் குறிக்கும்.
8. ஒரே மாதிரியான நிலையைப் பேணு வதைக் குறிக்கும் சொல். தமிழர் இன்று வேண்டுவதும் இதைத்தான்.
12. உணவுக் கால்வாயில் நடப்பது.
14. மூட்டைப் பாதிக்கும்ஒருநோய்.
16. பாராட்டுக்குரிய சொல்.
17. படிப்பு.
19. இருவகைப் பாலில் ஒன்று.
20. செடியின் பாகம்.
21. சிறையிருப்பவன் வேண்டுவது.
22. இரத்தம்.

**மேலிருந்து கீழ்**

1. பிறப்பு நிகழ்வு.
2. சிலப்பதிகாரத்தில் கோவலன் தந்தை.
3. தங்களுடையது.
4. பலவீடுகளில் காலை ஆகாரமாக இருந்த இது இன்று விலை யேறி விட்டுள்ளது.
5. தள்ளாமை வயதைக் குறிக்கும் அடைமொழி
7. நடன வகைகளில் ஒன்று.
9. தடு/பெண் ஆடு.
10. கட்டுப்பாட்டுக்குள் இருப்பதைக் குறிக்கும்.
13. பாட்டு.
15. கட்டுப்பாடில்லாமல் கெட்டலைபவன்.
16. கடற்கரையில் காணக்கூடிய ஜந்து.
17. இது சிறியது: ஆனால் இதன் காரம் பெரிது.
18. தங்குமிடம்.
19. திரவத்தைச் சூடாக்க இது உருவாகும்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 21**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (13.08.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.21 இல் வெற்றிபெற்றோர் விவரம் 17.08.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.*

**★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.**

**★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.**

**★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 19இற்கான சரியான விடைகள் வருமாறு:**

**இடமிருந்து வலம்**
(1) விவாகரத்து. (7) சிதிலம். (8)வாதம். (10) வரம்பு. (11) திரும்பவும். (14) ரசி. (15) கனி. (16) தாம். (17) பிரயாசம். (19)புசல். (20)கபோதி. (22) கழுகு. (23) குடதிசை.

**மேலிருந்து கீழ்**
(1) விசித்திரம். (2) வாதி. (3) கலகம். (4) ரம். (5) துவாரம். (6) அம்புஜம். (9) தம். (10) வவுனியா. (12) ருசி. (13) பகரல். (16) தாம்போதி. (17) பிசகு. (18) சகட. (19). புழு (21) திசை.

**★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.**

**★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 19 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவ ரங்கள் வருமாறு:-**

**1 ஆம் பரிசு**
**திருமதி.செ.பாக்கியநாதன்,**
*நூலகர், பொதுநூலகம்,*
*சங்கானை.*

**2 ஆம் பரிசு**
**திருமதி.மு.விமலாம்பிகை,**
*ஸ்ரீவாகீஸ்வரி வீதி,*
*கோண்டாவில் வடக்கு.*

**3 ஆம் பரிசு**
**நா.ஸ்ரீரங்கன்,**
*வலயக்கல்வி அலுவலகம் (வலிகாமம்)*
*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

**(1) பொ.நாகசிவாயம்,**
பண்டிதமணி இல்லம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

**(2) சி.பாலசுந்தரம்,**
பிள்ளையார் கோயில் வீதி.
கல்வளை, சண்டிலிப்பாய்.

**(3) யோகராசா ஜெகதீஸ்வரி**
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

**(4) திருமதி.தி.சிதம்பரநாதன்,**
டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**(5) உமாசங்கர் ஹம்சவி,**
மந்திகை அம்மன் கோயிலடி,
[illegible] வீதி, புலோலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டகலாத நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் ஆறுமுகம் இராஜகோபால்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், பொலிஸ் திணைக்களம்)

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 25*02*1925 | 16*06*2008 |

கடந்த 16.06.2008 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் ஆறுமுகம் இராஜகோபால் அவர்களின் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புது றோட்,
காரைநகர். (சி/554003) குடும்பத்தினர்.

# 'நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்''

இயேசுவின் அன்பு, பரிவு, இரக்கம் ஆகியவைகள் வெளிப்படுத்தும் மற்றுமொரு நிகழ்வுதான் ஐயாயிரம் பேருக்கு உணவளித்த நிகழ்வு. உணவு மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று. ''பசி வந்தால் பத்தும் பறந்து போகும்'' என்பார்கள். மனித மாண்பையே இழக்கக்கூடிய நிலைதான் பசியுற்ற நிலை. மனித மாண்பு சிதைக்கப்படுவதற்கு எதிராக இயேசு எப்பொழுதும் செயற்பட்டார் என்பதை எடுத்துக் காட்டும் நிகழ்வு இது. இந்த நிகழ்வின் தனித்தன்மை என்னவென்றால் இயேசு தன்னுடைய சீடர்களையே உணவளிக்கச் சொல்லுகிறார். அவர்களிடமிருந்த ரொட்டியையும், மீனையும் பயன்படுத்துகிறார். அதாவது ஒவ்வொரு மனிதரிடமுமுள்ள ஆற்றல்களும் கடவுள் செயற்படுத்தும் கருவிகளாக மாறும்போது அங்கு அரும் பெரும் செயல்கள் நடைபெறுகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றது.




இன்று நாமும் இயேசுவின் புதுமைகள் தொடர வேண்டுமாயின் நம் உணவை, உடைமைகளை பகிர்ந்துகொள்ளவேண்டும். பகிர்ந்து உண்டால் பசியிருக்காது. ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'' என்பதை உணர்ந்து விருந்தோம்பி வாழக் கற்றுக் கொள்வோம்.

''வரு விருந்து வைகலும் ஒம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று'', செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு (குறள்). ஆம்! பிறருக்கு உணவு அளிப்போம் சரீர உணவுமட்டுமன்று உள உணவு, ஆன்மீக உணவு முதலியவையும் அளிப்போம். அத்தோடு நில்லாது பசியார் நலிவோர் புசித்து அமைதி அடைய போராடுவோம்.''

''தனி ஒருவனுக்கு உணவில்லையெனின் செகத்தினை அழித்திடுவோம்'' (பாரதி) என்ற வாக்கை எமதாக்கி மற்றவர்களுக்கு உதவி செய்து எமது வாழ்வை பகிர்ந்து வாழ்வோம்.

மனவல்தாசன்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி மனோன்மணி (பூமணி) இராசலிங்கம்

மலர்வு 30*05*1942

உதிர்வு 14*08*2007

திதி: துதியை (03.08.2008)

அன்பூட்டி அமுதூட்டி வழிகாட்டி
எம் வாழ்வில் மெருகூட்டி
வளம் கூட்டிய அன்னையே!
சோதனைகள் பல தாங்கி
சோர்வின்றி வளர்த்தீர்கள்
வேதனையில் அம்மா என்று
கதறுகின்றோம் - உங்கள் செவிதனில்
கேட்கவில்லையோ அம்மா.

புங்குடுதீவு,
7ஆம் வட்டாரம்,
ஊரதீவு. (76868)

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

# அன்பளிப்பு

அமிர்தம் நெல்லிரசத்தின் எட்டு வெற்றுப் போத்தல்களை உங்களது வாடிக்கைக் கடையில் கொடுத்து ஒரு நெல்லிரசப் போத்தலை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளவும்.

**மில்க்கோ தொழிலகம்**
த.பெ.இல.77, யாழ்ப்பாணம். (76858)

# விற்பனைக்கு

வெளிநாட்டுத் தேர்வடம் (சாதாளை கயிறு) விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
108/01, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No.: 077 4404231 (76859)

# வீடு விற்பனைக்கு

சுதுமலை வடக்கு,
மானிப்பாயில் 20 பரப்புக் காணியும்
வீடும் விற்பனைக்கு.
தொடர்பு: சு.விநாயகமூர்த்தி,
''கைலாசபதி'', சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (76852)

# JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

## விவசாய சான்றிதழ் பயிற்சிநெறி

நான்கு மாத கால இலவச பயிற்சிநெறி. விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம் ஆகிய பாடநெறிகளை உள்ளடக்கிய விவசாய சான்றிதழ் பயிற்சிநெறிக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் 17-26 வயதுக்குட்பட்டிருக்கவேண்டும்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 11.08.2008 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித்தகைமைப் பத்திரங்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், இருவேறு நற்சான்றிதழ் பத்திரங்களுடன் சமுகமளிக்கவும். பயிற்சிநெறிக் காலத்தில் உதவுதொகை வழங்கப்படும். பயிற்சிநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:
அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம். (76840)

# மரண அறிவித்தல்

## குழந்தைவேல் நடராஜன்

## ( காசநோய் தடுப்பு முன்னாள் உத்தியோகத்தர்)



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேல் நடராஜன் 28.07.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேல் (மலாயன் பென்சனியர்) - சரஸ்வதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்) - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சாவித்திரி (ஜேர்மனி), விஜயகுமார் (ஆஸ்திரேலியா), ரவீந்திரகுமார் (கனடா), காயத்திரி( லண்டன்) ஆகியோரின் தந்தையும் மகாதேவன் (ஜேர்மனி), வசந்தா (ஆஸ்திரேலியா), பாமினி (கனடா), சூரியகுமார் (லண்டன்), நிரஞ்சினி (ஜேர்மனி), ராஜகுமாரன் (லண்டன்), கமலினி (கனடா), பிரசாத், வினோதினி, பார்த்தீபன், பிரதீபன், கௌதமி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற அத்தியட்சகர், மதுவரித் திணைக்களம்), காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் யோகரட்ணம், சகுந்தலா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் தவமணிதேவி (லண்டன்), விஜயா, திருக்குமரன் (டுபாய்) ஆகியோரின் சகோதரனும் பிருந்தா, பிரஷன்யா (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் ஷாளினி, கோகுலன், ஜனனி, அஞ்சலி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3586

தகவல்:
மனைவி,
பிள்ளைகள். (76861)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மகிழ 27-05-1942



அனைவரும் நெகிழ 02-07-2008

### அமரர் திருமதி ராதாதேவி பத்மநாதன்
(ராதா ரீச்சர்)

கடந்த 02.07.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளைக் குறைவின்றி நிறைவேற்ற சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும்.. தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியோருக்கும், மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் செய்த அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று 03.08.2008 நடைபெறும் ஆத்ம சாந்திப் பிராத்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

95, ''காஞ்சி இல்லம்'',
தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 12 1945



உதிர்வு 03 08 2006

### அமரர் லடிஸ்லாஸ் மேரி பேர்டினட்
(ஒய்வுபெற்ற ஆசிரியர், சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

ஈராண்டுகள் கழிந்தாலும் - எம்
ஈரவிழிகள் காயவில்லை - உம்
பால் முகம் மறையவில்லை
நீ வளர்த்த உறவில் - எம்
உள்ளங்கள் நெகிழ்கின்றன
நீ செய்த இறுதிப் பவனி - எம்
நெஞ்சங்களைப் பிழிகின்றது
வேளை வருமுன்னே
ஆண்டவன் உனை அழைத்தானே
வேகின்றோம் உம் நினைவால்
வேதனைத் துடிப்பினிலே
வேண்டுகின்றோம் தினம் உமக்காக.

நாளை (04.08.2008) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு பாசையூர் புனித அந் தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.


5ஆம் குறுக்குத்தெரு,
பாசையூர், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.

(76838)

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு | பத்தாம் ஆண்டு





அமரர் சரவணமுத்து சதாசிவம்
(ஓய்வுபெற்ற அதிபர், சாண்டோ மாஸ்ரர்)

திருமதி நாகம்மா சதாசிவம்

06.12.1922 ← மலர்வு → 22.08.1924
14.08.2007 ← உதிர்வு → 30.03.1998

திதி: துதியை

காக்கும் என் காவலனே! அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஆகிடினும் ஆறிடுமோ
எங்கள் மனம். நீங்கள் இல்லாத வாழ்வினை
நினைத்துப் பார்க்க முடிகிறதா?
துன்பக்கடலில் மூழ்கியே துவண்டு
துடிக்கின்றோம் துன்பங்கள் கலைந்திடவே
துருப்பாய் எங்களை வழிநடத்தும் எம்
தந்தையே! இனி எப்போ
வருவீர்கள் எம்மைக் காண?

305, A.V.றோட்,
அரியாலை.

(76828)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.

(76827)

## கல்விக் கண்காட்சி

சுழிபுரம்,ஓக.3

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.மேற்குப் பிரதேச சபையும் வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து கல்விக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளன.

இக்கண்காட்சி கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குச் சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார். (202-28)

## உடுவில் ம.கல்லூரியின் தமிழ்மொழித்தின விழா சிறப்புற நடைபெற்றது

வலி.வடக்கு,ஓக.3

உடுவில் மகளிர் கல்லூரியின் தமிழ் விழா கல்லூரி அதிபர் திருமதி ஷிரானி மில்ஸ் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் கல்லூரி மாணவிகளின் நடனம், பேச்சு, கர்நாடக இசைக்கச்சேரி, வில்லுப்பாட்டு, கும்மி என்பவற்றுடன் கிராமியப் பாடலான புறப்படுவோமே என்னும் குழுப்பாடலும் ''வெல்க மானிடம்'' என்னும் சமூக நாடகமும் இடம்பெற்றன. (202-86)

## அளவெட்டியில் முன்பள்ளிகளுக்கு விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.3

அளவெட்டி மகாஜன சபை சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் 'யுனிற்' நிறுவனம் மற்றும் பிரதேச வங்கிகளின் அனுசரணையுடன் நடத்தப்படும் முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் அளவெட்டி சுப்பிரமணிய சுவாமிகள் கலாசார நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் பங்குபற்றுவார். (1)

## அரிமாக் கழகம் (Lions Club) - வட்டுக்கோட்டை
## கணனிப் பயிற்சி


வட்டுக்கோட்டை அரிமாக் கழகத்தினரால் மிகவும் குறைந்த கட்டணத்தில் புதிய கணனி வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. விண்ணப்பதாரிகள் குறைந்தது க.பொ.த. (சா/த) பரீட்சையில் தோற்றியவர்களாக இருத்தல்வேண்டும்.

தாங்கள் தெரிவுசெய்யும் பாடநெறியினைக் குறிப்பிட்டு விண்ணப்பங்களை 06.08.2008 புதன்கிழமை பி.ப. 4 மணி தொடக்கம் நேரடியாகக் கழகச் செயலகத்தில் (சித்தன்கேணி) கையளிக்கமுடியும்.

தெல்லிப்பழை வீதி, சித்தன்கேணி.
01.08.2008 (76834)

**செயலாளர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சரவணமுத்து சதாசிவம்

அவர்கள் இறைபதம் அடைந்து ஓராண்டு நிறைவடைந்துவிட்டது.

அவர் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய பரிபாலன சபையில் நீண்டகாலமாகச் செயலாளராகப் பணியாற்றி ஆலயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அரும்பாடுபட்டு உழைத்த உத்தமர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன, திருப்பணிச் சபையினர்,**
யா/நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயம்.

(76820)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி





செல்வி அ.இந்துமதி | திருமதி கி.சிவகெங்கா

05.05.1968 ← தோற்றம் → 11.04.1950
25.07.1998 ← மறைவு → 25.07.1998

திதி: 03.08.2008

ஆழ்கடலில் இருவீரும் ஆறாத்துயிலில் மூழ்கியிந்நாள்
ஆண்டுகள் பத்திங்கு அகன்றபடி உணர்கிலமே
ஏழ் ஜென்மம் எது தன்னில் இன்முகத்தில் விழிப்பமினி
என்றென்றும் கலங்கிறமே இனுமொருகால் உதியீரோ?

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.
(76789)

தங்கள் பிரிவால் துயர் மூழ்கும்:
ஆ.கி.அருணகிரிராசாவும்
குடும்பத்தினரும்.


பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே! G.S.லிங்கநாதன் அன்கோ ஸ்தாபனம்



நேரடியாகத் தருவிக்கப்பட்ட புத்தம் புதிய சாரிவகைகள்,
திருமணப் பட்டுப் புடைவைகள் (வித்தியாசமான தெரிவுகள்)
விற்பனைக்கு வந்துவிட்டன என்பதனை
எமது வாடிக்கையாளர்களுக்குப் பெரு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

தெரிவுக்கு முந்துங்கள்

★ நவீனரக புதிய புடைவைத் தெரிவுகள்,
★ றெடிமேட் ஆடைவகைகள்,

உங்கள் மகிழ்ச்சியே எங்கள் திருப்தி

பான்சி ரகங்கள், வெடிங் கிவ்ற்ஸ், சூட்கேஸ் வகைகள், பேபி நிட்ஸ், றெஜிபோம் எழுத்துக்களும், வாழ்த்துகளும்,
பூ மாலைகள் அனைத்துப் பான்சி ரகங்களும் பெற்றுக்கொள்ள G.S.லிங்கநாதனின் 3 ஆம் மாடி
சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்தையும் ஒரே இடத்தில்
தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
★ சிறுவர் சிறுமிகளுக்கு அன்பளிப்புப் பொருள்கள் இனாமாக வழங்கப்படுகிறது.

### புதிய சாறிகள்

| | | | |
|---|---|---|---|
| 1.Aswini | அஸ்வினி | 19.Nepaly Silk | நேபாளி சில்க் |
| 2.Silver Touch | சில்வர் ரச் | 20.Jamasim | யமசின் |
| 3.Muniaandy | முனியாண்டி | 21.Villu Saree | வில்லு சாறி |
| 4.Anna-Tangi | அண்ணா தங்கை | 22.Mecna Silk | மேக்னா சில்க் |
| 5.Vinay Silk | சில்க் வினே | 23.Sofia Saree | சேபியா சாறி |
| 6.Piriyanka-Saree | பிரியங்கா சாறி | 24.Tulsi Silk | ருல்சி சில்க் |
| 7.Kirazy Silk | கிரேசி சில்க் | 25.Varsaw Silk | வர்சோ சில்க் |
| 8.Kofi Saree | கோபி சாறி | 26.Nelco Saree | நெல்கோ சாறி |
| 9.Raj-Guru | ராஜ் குரு | 27.Gawdwal Saree | கோட் வால் சாறி |
| 10.Kuruvvi | குருவி | 28.Robo Silk | ரோபோ சில்க் |
| 11.Kuselan | குசேலன் | 29.Marma Yogi | மர்ம யோகி |
| 12.Kalpana | கல்பனா சாறி | 30.Yarady Nee Mohini | யாரடி நீ மோகினி |
| 13.Luxary silk | லக்ஸ்சறி சில்க் | 31.Susmita | சுஸ்மிற்றா |
| 14.Pandy Saree | பாண்டி சாறி | 32.Just Marriage | யஸ்ற் மறிச் |
| 15.Henstar Saree | கென்ஸ்ரார் சாறி | 33.Sindoor | சிந்தூர் |
| 16.Kalyani Cotton | கல்யாணி கொட்டன் | 34.Gold Glass | கோல்ட் கிலாஸ் |
| 17.Thasavatharam | தசாவதாரம் | 35.Kolkatta | கொல்கத்தா |
| 18.Namitha Silk | நமிதா சில்க் | | |

அரவிந் மில் - மணிஸ்ஸா றெறின் 1 மீற்றர் - 225/=
அரவிந் மில் - சகோறி றெறின் 1 மீற்றர் -275/=
புத்தம்புதிய சுரிதார் தெரிவுகளை திருப்தியாகப் பார்த்து எடுத்துக்கொள்ள ....

**G.S.லிங்கநாதன் அன்கோ**

சாறித் தெரிவுகளுக்கு:-
இல.13,14, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

ஏனைய தெரிவுகளுக்கு:-
இல.47, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண். வடமேற்கு- ஆனைக்கோட்டை (கொக்குவில்)

# திருவருள்மிகு ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய

# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 2008







## உலக மாதா தேரேறி வருகிறாள்



யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் பிடாரி அம்பிகை இன்று தேரேறி அருட்காட்சி தருவது அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. உலக மாதாவாகிய அன்னை இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு பிடாரி அம்பிகையாக வீற்றிருக்கின்றாள்.

ஆன்ம விடுதலையின் பொருட்டு மனிதனாக பிறந்த உயிர் அனைத்தும், இறைவன் பால் அன்பு கொள்கின்றன. இதை நிலை நிறுத்தும் பொருட்டு அஞ்ஞான இருளை நீக்கி மெஞ்ஞான ஒளியை ஏற்றுவதே தேர்த்திருவிழாவாகும். இதனாலேயே "வடம் பிடித்தால் வானத்தில் இடம் பிடிக்கலாம்" என நம் சமயம் போற்றுகின்றது. இன்று தேரேறும் அம்பிகையை அனைவரும் வழிபாடு செய்து மன அமைதியோடும் இறைசிந்தனையோடும் வாழ்வோமாக. என்றும் அமைதியும் சந்தோஷமும் நிலவ அம்பிகையை பிரார்த்திப்போமாக.

உப தலைவர்,
அ. குமாரவேலு
(விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி).

தேரேறி வரும் பிடாரி அம்பிகையின் திருவருள் காட்சியினை அனைவரும் கண்டு அம்பிகையின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

இந்து இளைர் மன்றம்.

## அன்னையின் அருளில் அன்பர்களின் இதயம் நனையட்டும்



ஈழமணித் திருநாட்டின் மகுடம் போல் விளங்கும் யாழ். நகரின் அணித்தே சக்தி வழிபாட்டின் மேன்மையைப் புலப்படுத்தும் ஆலயங்கள் பல இருப்பினும் வண்.வடமேற்கு அனையூர் பதியில் அருளாட்சி புரியும் அன்னை வீரமா பிடாரி அம்பாள் ஆலய மானது அன்னையின் அனுக்கிரகத்தினாலும், பக்தர்களின் பேராதரவினாலும் மிகக் குறுகிய காலத்தில் உன்னத வளர்ச்சியடைந்து, யாழ்ப்பாணத்திலுள்ள மிகச் சிறந்த ஆலயங்களில் ஒன்றாக மிளிர்வதையும், அவளது அருட்பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுவதையும், அவளது அடியவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அப்படிப்பட்ட அன்னைக்கு இன்று இரதோற்சவம் நடைபெறுகின்றது.

ஆலயத்தில் நடைபெறும் நைமித்திய கிரியைகளில் மஹோற்சவம் சிறப்புக கருதப்படுகிறது. இந்த மஹோற்சவ காலத்தில் உன்னத சிறப்பு வாய்ந்ததாக இரதோற்சவம் விளங்குகின்றது. ஊர் கூடித் தேர் இழுக்கும் இந்த நிகழ்வானது ஒவ்வொரு ஆன்மாவும் பிறவிப் பிணியை அகற்றி உயர்வு பெறக் கூடிய உன்னத நிலையை உருவாக்கும் தன்மை வாய்ந்தது என்றால் அது மிகையாகாது. இதனாலேயே "வடம் பிடித்தால் வாதைகள் நீங்கும்" என்று முன்னோர் மொழிந்தனர். எனவே இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி யாம் அனைவரும் அம்பிகை பவனி வரும் தேரின் வடம் பிடிப்போம். இதனால் அடியார்களின் வாழ்வும் வளமும் பெருகும், நாட்டில் அன்பும் அறனும் ஓங்கும், அடியவர்களுக்கு அருளும் பொருளும் சிறக்கும் என்பது திண்ணம். இரதோற்சவ நன்நாளில் அம்பிகையின் அருள் அகிலத்திற்கு கிடைக்க வேண்டும்.

அவளின் அருள்மழை நானிலத்தை நனைக்க வேண்டும்.
அன்னையின் அடியவர்கள் இன்புற்று வாழவேண்டும்.
அவள் திருவடியில் நாமென்றும் திளைக்க வேண்டும்.

என்று எல்லாம் வல்ல அம்பிகையின் பாதார விந்தங்களை பணிந்து இந்த வைபவத்தை முன்னிட்டு வெளிவரும் இரதோற்சவ மலர் சிறப்பாக அமைந்து எல்லோர்க்கும் பயன்பெற வேண்டுமென பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவஸ்ரீ சோம.சிவகுமாரக் குருக்கள்,
தேவஸ்தான பிரதமகுரு,
வீரமா பிடாரி அம்பாள் ஆலயம்.

யாழ்ப்பாணத் திருநகரை அணி செய்யும் ஆலயங்களுள் பிரசித்தி பெற்று விளங்கும் ஆலயம் ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலயம். இவ் வாலயத்தில் எழுந்தருளி இருக்கும் அம்பாள் சக்தியும் கருணையும் மிக்கவள். அல்லல்கள் அகற்றி ஆறுதல் அளிக்கும் கருணைத் தெய்வம். அருள் வளமும் பொருள் வளமும் ஒரு சேரப்பெற்ற அன்பர்கள் பலரை தன்னகத்தே கொண்ட கோயில் இதுவாகும்.

**பூரணி நகைமாடம்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சுந்தர்சன்**
மின் உபகரண விற்பனை
நிலையம்,
மானிப்பாய்.

## விழாச் சிறப்புற வாழ்த்துவோர்

**கணேசா களஞ்சியம்**
சந்திரு தேயிலை,
சாலா தேயிலை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் விற்பனை
செய்யும் இடம்.
20, முருகமூர்த்தி வீதி,
யாழ்ப்பாணம்.

**சொலெக்ஸ் பல் முக்குக் கண்ணாடி அகம்**
516, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**பிடாரி அம்பாள் சனசமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும்.**

**சானுகா 50 நகைமாடம்**
இல.200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: செ.வீ.ஜெயசீலன்

**ஏசியன் அக்கடமி**
கேணியடி,
கொக்குவில் மேற்கு.

**பாக்யா இசைப் பயிலகம்**
மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு.

**வெஸ்ரா இன்டஸ்றீட்ஸ்**
குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.

புலம் பெயர்ந்து
சர்வதேச நாடுகளில் வாழும்
அம்பிகை அடியார்கள்.

**சுந்தர் ஸ்ரோர்ஸ்**
கேணியடி,
கொக்குவில் மேற்கு.

**கீதா றேடர்ஸ்**
மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம்.

**சிவானுஷன் கேபிள் - விசன்**
புது வீதி, ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.
தொ.பேசி 077 7110326

**ஆரணி நகைத்தொழிலகம்**
பிடாரி அம்பாள் கோயிலடி.

**வளர்மதி ரெக்ஸ் ரைல்ஸ்**
கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

**சிறி அம்பாள் வெல்டோஸ்**
உறுதியான இருப்பு வேலைக்கருவி
1039, கே. கே. எஸ் றோட்,
நாச்சிமார்கோயிலடி.

**அம்பிகை களஞ்சியம்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**நந்தினி பேக்கரி**
குளப்பிட்டி றோட்,
ஆனைக்கோட்டை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**சிறி மீனாட்சி நகை மாளிகை**
187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பிடாரி களஞ்சியம்**
வரகி கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**சந்திரா வர்த்தக நிலையம்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**தயாழினி வீடியோ சென்ரர் பென்சி கவுஸ்**
பிடாரி கோயிலடி,கொக்குவில்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களை
22 கரட்டில் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்
**செல்வி நகை அகம்**
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

வல்வெட்டித்துறை நகரசபையின் முகாமைத்துவ உதவியாளர்
செல்வி ஸ்ரீதரன் சுகன்யா
அவர்களின் அன்புத் தந்தை

### திருநாவுக்கரசு ஸ்ரீதரன்

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நகராட்சிமன்றம்,
வல்வெட்டித்துறை.

செயலாளர்,
உத்தியோகத்தர், ஊழியர்கள். (இ/554013)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 | 03 |
| ★ | ★ |
| 10 | 08 |
| ★ | ★ |
| 1958 | 2007 |



### திருமதி தயாபரன் ஜெயலக்சுமி (ஜெயம்)

03.08.2007 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப குலவிளக்கின் முதலாம் ஆண்டு நினைவலைகள் இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அவ்வேளை தாங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

T.J. லக்சுமி மர வாணிபம்,
இராஜேபதி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய். (76881)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தங்கம்மா கணபதிப்பிள்ளை



யாழ்ப்பாணம், தென்மராட்சி, மறவன்புலோ, வள்ளக்குளம் பிள்ளையார் கோயிலின் முன்னாள் அறங்காவலரும், ஸ்ரீகாந்தா அச்சகம், காந்தளகம் நிறுவனங்களின் உரிமையாளருமான காலஞ்சென்ற முருகேசு கணபதிப்பிள்ளை அவர்களின் பிரிய துணைவியார் *திருமதி தங்கம்மா கணபதிப்பிள்ளை* அவர்கள் (ஐயனார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், மறவுன்புலோவையும் ஐயனார்கோயிலடியையும் வசிப்பிடங்களாகவும் கொண்டவர்) சென்னையில் (01.08.2008) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்கள்.

இவர் ஐயனார்கோயிலடி சரோஜினிதேவி, மறவன் புலோ சச்சிதானந்தன், நீராவியடி சாந்தாதேவி ஆகியோரின் பாசமிகு அன்புத் தாயாரும் ஆவார். சிவசுப்பிரமணியம், இராஜராஜேஸ்வரி, இரகுநாதமுதலியார் ஆகியோரின் பிரிய மாமியார். சிற் சபேசன் அம்பிகா, சிவநங்கை சுரேன், கயல்விழி ரமேஷ், சிவகாமி கேசவன், முருகவேள் தொமாகா, பிஞ்ஞகன் அனுபமா, தில்லைக்கண்ணன், அங்கயிற்கண்ணி சிவப்பிரகாஷ், பங்கயற்செல்வி சுந்தரேசன் ஆகியோரின் பிரேமை மிகு பேர்த்தியார், சகாயன், சேயோன், பார்த்திபன், அரன், ஆதித்தன், மருதினி, கஜன், கஜலஷ்மி, சுப்பிரசன்னா, கரிஷ்மா, தர்வீன் ஆகியோரின் அருமைப் பூட்டியார்.

இவரின் ஈமக்கிரியைகள் சென்னை பெசன்நகர் மயானத்தில் நேற்று (02.08.2008) சனிக்கிழமை காலை நடைபெற்றன.

தகவல்:
திருமதி சரோஜினிதேவி,
மறவன்புலோ சச்சிதானந்தன்,
திருமதி சாந்தாதேவி,
(பிள்ளைகள்).
(76876)

## மின்சாதனம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.3

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பழைய மாணவர்களும், முன்னாள் அதிபரும் மின் சாதனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

பாடசாலையின் முன்னாள் அதிபர் க.மயில்வாகனம் கணனி அச்சுப் பிரதியெடுக்கும் (பிரிண்டர்) சாதனத்தையும் -

பாடசாலையின் பழைய மாணவர்களான மட்டுவில் தெற்கைச் சேர்ந்த க.முல்லைமாறன் தம்பதியினர் மின்சார அலார மணியினையும் -

கைதடியைச் சேர்ந்த சிறிதரன் மின் விசிறியையும் பாடசாலைக்கு வழங்கியுள்ளனர். பாடசாலை அதிபர் வே.சுந்தரலிங்கம் இத் தகவலைத் தெரிவித்தார். (02-207)

## தேர்ச் சில்லில் கால் நசியுண்டு காயம்

யாழ்ப்பாணம், ஓக.3

தேர்ச்சில்லுக்குள் கால் பாதம் அகப்பட்டு நசிந்ததில் அடியவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி விளாவேலி துர்க்கை அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்றது. கல்வயலைச் சேர்ந்த என்.இராசசிங்கம் (வயது 40) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

தேர்ச் சில்லுக்கு கட்டையிடும் பணியில் ஈடுபட்டிருந்தபோது சன நெருக்கடியில் தள்ளுண்ட அவரின் கால் பாதம் சில்லுக்குள் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (2-207)

## கணனி விற்பனைக்கு

**Intel PentiumIV** (Branded) 1.6 $GH_2$ *(Tower Model), 17"* Samsung Digital Monitor, Ram 256, Hard Disk -40 GB, V.G.A Card 64 MB, Cashing 600 ATX Sound Card, Speaker(Slim for LCD), Logitech Keyboard, Mouse & Network Card. **35,500**

**ஒரு வருட உத்தரவாதம்**

*அரச ஊழியர்களுக்கு இலகு தவணை கடன் அடிப்படையில் வழங்கப்படும்.*

**STR Computer System**
**No. 380, Navalar Road, Nallur,**
**Jaffna, Tel :- 021-4590775**
**(Near to Kailasapillayar Kovil)**

## தவறிவிட்டது

சந்திரகுமார் வசந்தகுமாரி என்பவருடைய தே.அ.அட்டை (566662574V) 28.07.2008 அன்று சுன்னாகம் மீன் சந்தை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: ம.சந்திரகுமார்
யோகன் களஞ்சியம், சந்தை தெற்கு வீதி, சுன்னாகம்.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

1 1/2 மாத கறுப்பு நிற ஆண், பெண் அல்சேசன் நாய்க்குட்டிகளும், 8 மாத ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: T.P. No. 021 222 5283

## காணி விற்பனைக்கு

K.K.S. வீதியில் தட்டாதெருச்சந்திக்கு அண்மையில் கடைகள் கட்டக்கூடிய கிணறு, மின்சாரவசதி கொண்ட 1 1/4 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6158626
021 222 2699


## எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு

**Bata** புதிய வரவுகள்



*எம்மிடம் மாணவர், உத்தியோகத்தர், வாலிபர், இளம் பெண்கள், சிறு பிள்ளைகளுக்கான அழகாக வடிவமைக்கப்பட்ட*

சப்பாத்துக்கள், பிளற்போம் பாதணிகள், ஹீல்ஸ், லெதர் பாதணிகள், நவீன ரபர் பாட்டாக்கள், 'ஆரோக்கிய' ரபர் பாட்டாக்கள்

என்பன உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**லக்ஷ்மி ஒகனைசேஷன்**

*(வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்)*

இல. 25, 4ஆம் லேன்,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

(எமது இடம் பிறவுண் வீதியில் உள்ள மின்சார நிலைய காரியாலயத்திற்கும், கலட்டிச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ளது)

(சி/554011)


## சுத்திகரிப்புத் தொழிலாளருக்கான பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஓக.3

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பகுதியில் சுத்திகரிப்புத் தொழிலாளர் ஆள் சேர்ப்பு செயன் முறைப் பரீட்சைகள் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் நாளையும் பிரதேச வைத்தியசாலையில் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. (3)


## SEASIDE MEDICAL CLINIC

சீசைட் மெடிக்கல் கிளினிக்

சகல விதமான நோய்களுக்கும் MBBS வைத்தியர்களால் ஆலோசனைகள், சிகிச்சை, சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் பின்வரும் நிபுணத்துவர்களின் வைத்திய சேவைகளும் மேற்கொள்ளப்படுகின் றன.

1. பொது வைத்திய நிபுணர்
   Consultant Physician
2. இருதய சிகிச்சை நிபுணர்
   Consultant Cardiologist
3. மகப்பேற்று வைத்திய நிபுணர்
   Consultant Gynoecologist

பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
T.P. 0713056033 நிர்வாகி.

இல. 131, மவுன்கார்மல் வீதி, யாழ்ப்பாணம்.
(திருக்குடும்பக் கன்னியர் மடத்திற்கு அருகில்)
(76872)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவலிங்கம் செல்லம்மா (கிளி)



நவபுரம், கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் செல்லம்மா (கிளி) நேற்று (02.08.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பொடியன் - காலஞ்சென்ற முதலிச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலன் - பொன்னி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும் சஞ்சீவன், புஜீவன் (முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயம், கைதடி), நிக்ஸன் (குருசாமி வித்தியாலயம், கைதடி), தாரங்கினி (யா/எருதிடல் அ.த.க.பாடசாலை, கைதடி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவபுரம்,
கைதடி. (சி/554010)

தகவல்:
குடும்பத்தினர்.

### சுப்பிரமணியம் மார்க்கண்டு

[முன்னாள் களஞ்சிய பொறுப்பாளர், M.P.C.S பண்டத்தரிப்பு]



மாதகல், விபுலானந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மார்க்கண்டு நேற்று (02.08.2008) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் ஜெயலட்சுமியின் பாசமிகு கணவரும் ஜெயமாலினி, ஜெயசுபாசினி, கிருஸ்ணகுமார் (M.P.C.S, பண்டத்தரிப்பு), ஜெயசுபாகர் (U.K), விகேந்திரவாசன், சசிகலாதேவி, கிருஸ்ணலீலா ஆகியோரின் அன்புத் தந்தையும், தயானந்தராசா, நந்தகுமார் (யாழ்.பெற்றோலிய கூட்டுத் தாபனம்), சிவனேஸ்வரி, சஜித்தா ஆகியோரின் அன்பு மாமனும், யுகர்ணியா, கரிகரன், நேருசன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர்களான இராமசாமி, சின்னப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தங்கராசா (முன்னாள் கணக்காளர் M.P.C.S, பண்டத்தரிப்பு), துரைராசா (G.S., மாதகல் கிழக்கு) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விபுலானந்தர் வீதி,
மாதகல். (சி/554012)

தகவல்:
மா.ஜெயலட்சுமி
(மனைவி)

### சிதம்பரப்பிள்ளை கணேசன்

[ஓய்வுபெற்ற ஆசிரியர்]



கரவெட்டி, மத்தொனியைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி, நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கணேசன் நேற்று (02.08.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பபிதா (சுவிஸ்), லலிதா (பிரான்ஸ்), மோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மோகன்ஸ்"
பிரதான வீதி,
நெல்லியடி. (சி/554017)

தகவல்:
க.மோகன்
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்வதேசத்தின் கருத்து நிலைப்பாடு கொழும்புத் தலைமைக்குப் புரியுமா?

சர்வதேச மட்டத்தில் மதிக்கப்படும் ஓர் உயர் மட்ட நிகழ்வாக 'சார்க்' மாநாடு இலங்கையில் நடைபெறுகையில் இந்த மாநாட்டுடன் சம்பந்தப்பட்ட இருதரப்புகள் வெளிப் படையாகத் தெரிவித்துள்ள முக்கிய கருத்துகள் இந்தச் சமயத்தில் நோக்கற் பாலவையாக அமைந்துள்ளன.

இப் பிராந்தியத்தின் வல்லாதிக்க நாடான இந்தியாவின் அரசுத் தலைவரும், உலக வல்லரசான அமெரிக்காவின் பிரதிநிதியும் குறிப்பிட்ட கருத்துக்களே அவை.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கொழும்பு வந்துள்ள இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்கும், இந்த மாநாட்டில் பார்வையாளராகப் பங்குபற்ற வந்திருக்கும் அமெரிக்காவின் தெற்காசிய பிராந்திய விவகாரங்களை கையாளும் உதவி இராஜாங்கச் செயலாளரான ரிச்சர்ட் பௌச்சருமே அவர்கள் இருவருமாவர்.

இருவருமே இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்து நாசூக்காகத் தெரிவித்துள்ள கருத்துக்கள் ஆழம்மிக்கவை.

*''இலங்கையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே, மனித உரிமைகள் விவகாரத்தில் மாற்றம் கொண்டுவரப்படுவது அவசியம்.''* - என்று குறிப்பிட்டுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், தாம் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேரில் சந்திக்கும் போது இது குறித்து அவரிடம் எடுத்துரைக்கப்போகின்றார் என்றும் குறிப்பிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிப்பிரதிநிதிகளைச் சந் தித்துப் பேசிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதே சமயம் - கொழும்பு அரசு, புலிகளிடமிருந்து பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொண்டாலும் அந்த நாடு ஜனநாயக நாடு போல செயற்பட்டு தனது சகல பிரஜைகளையும் காப்பாற்ற வேண்டும் என்றும் -

ஜனநாயகத்தின் பண்பியல்புகளையும், பயனையும் நாட்டின் சகல மக்களும் பெறக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும் -

அமெரிக்கப் பிரதிநிதி கூறியிருக்கின்றார்.

ஜனநாயக விரோதமாக இலங்கை அரசு செயற்படுகின்றது என்று திட்டவட்டமான வார்த்தைகளில் ரிச்சார்ட் பௌச்சர் கொழும்பை நேரடியாகச் சாடாவிட்டாலும் -

சிறுபான்மையினரின் ஜனநாயக உரிமைகள் கூட மறுக்கப்படுகின்றன என்பதும் -

ஜனநாயகத்தின் நலனைக்கூட - பயனைக்கூட - பெற முடியாத நிலையில் அவர்கள் இங்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்பதும் -

அவரது கருத்துக்குள் தெளிவாகவும், விளக்கமாகவும் தொக்கி நிற்பதை அதை வாசிப்பவர்கள் இலகுவாகப் புரிந்து கொள்வர்.

''நாட்டின் அனைத்து மக்களும் ஜனநாயக அரசு ஒன்றிடமிருந்து நன்மையை அனுபவிக்க வேண்டும் அவர்களுடைய மனித உரிமை மதிக்கப்பட வேண்டும்'' - என்று ரிச்சரிட் பௌச்சர் தெரிவித்துள்ள கருத்துக்குள் ''மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மனித உரிமைகள் நிலைவரத்தில் நிச்சயம் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்'' என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கூறிய கருத்தின் சாராம்சமும் புதைந்து கிடப்பது அவதானிக்கத்தக்கது.

''இலங்கை இனப்பிரச்சனைக்கு யுத்தம் தீர்வல்ல'' - என்பதையும் இந்தியப் பிரதமர் திரும்பவும் கொழும்பில் வைத்து வலியுறுத்தியிருக்கின்றார்.

அமெரிக்காவின் - ஏன், ஏனைய உலக நாடுகள் அனைத்துமே - திரும்பத் திரும்ப வலியுறுத்தி வரும் ஒரே விடயமும் இதுதான்.

யுத்த வெறித் தீவிரத்தில் நிற்கும் மகிந்தவின் கொழும்பு அரசு, பௌத்த - சிங்களப் பேரினவாதத்தில் மூழ்கிக்கிடக்கும் தனது தென்னிலங்கை வாக்கு வங்கியைத் திருப்திப்படுத்தவும், தனது மேலாண்மைத் திமிரை உறுதிப்படுத்தி, அந்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவும் தமிழர் தாயகம் மீது கொடூர யுத்தத்தை ஏவி விட்டிருக்கின்றது. அதன் ஓர் அங்கமாக அரச பயங்கரவாதமும் கட்டவிழ்கின்றது. தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

கட்டுமட்டின்றி அரங்கேறும் மோசமான மனித உரிமை மீறல்களுக்கு இடமளித்து வாளாவிருக்கின்றது கொழும்பு அதிகார வர்க்கம்.

தண்டனையிலிருந்து விலக்களிக்கும் விசேட சட்டச் சலுகைகள் படையினருக்கு தாராளமாக வழங்கப்பட்டிருப்பது, நாட்டில் காட்டுத்தர்பாரும், வன்முறைக் கொடூரங்களும் அளவு கணக்கின்றி அரங்கேற இடமளித்து நிற்கின்றன.

அமெரிக்கா, இந்தியா போன்ற சர்வதேசத்தில் பிரதான தரப்புகள் கூட இலங்கையின் இத்தகைய யதார்த்தப் புறநிலையை நன்கு உணர்ந்து, அறிந்து வைத்துள்ளன.

எனினும் சர்வதேச மாநாடு ஒன்றை நடத்தும் ஒரு நாட்டுக்கு எதிராக - அச்சமயத்தில் - அங்கு நின்று கொண்டு - நேரடியாக அவற்றைச் சுட்டிக்காட்டுவது இராஜதந்திர மரபல்ல என்பதால் அப்படிக் கூறாமல், நாசூக்கான வார்த்தைகளில் - சொல்லாடல்களில் - இலங்கை அரசுத் தலமைக்கு ''சூடு'' வைக்கின்றன அந் நாடுகள்.

இது கொழும்பு நிர்வாகத்துக்குப் புரியுமோ, என்னவோ ......!




# சுயநலவாதிகளாக வாழ்த்து கொண்டிருக்கும் மக்களை பொதுநலவாதிகளாக மாற்றுகின்றது இரத்ததானம்

## குருதிக்கொடையாளர் கௌரவிப்பு விழாவில் மாவட்ட நீதிபதி

யாழ்ப்பாணம், ஓக.3

சுயநலவாதிகளாக இருக்கும் மக்களை பொது நலவாதிகளாக மாற்றுகிறது இரத்ததானம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன்.

திருமறைக் கலாமன்றத்தில் கலைத்தூது மணி மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற குருதிக்கொடையாளர்களை கௌரவிக்கும் விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தானங்களில் சிறந்த தானம் இரத்த தானம். ஒருவன் உயிருக்காகப் போராடும் போது அந்த உயிரைக் காப்பாற்றுவதற்கு இரத்த தானம் வழங்கப்படுவதைப் போன்று உயரிய பணி வேறொன்றும் இல்லை.

இரத்ததானம் மிகவும் மதிக்கப்பட வேண்டிய தொன்று. இந்தக் குருதிக் கொடையாளர்களும் மதிக்கப்பட வேண்டியவர்கள்.உயிர்காக்கும் உன்னத பணியை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இன்று யாழ்ப்பாணத்தில் பெரும்பாலானோர் பெயருக்குத் தான் தானம் செய்கிறார்கள்.ஆயினும், இரத்த தானம் அப்படியானதல்ல. இங்கு இப்போது ஆடம்பரங்களுக்கே அதிகளவு பணம் செலவிடப்படுகின்றது.அவை தவிர்க்கப்பட்டு இத்தகைய தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் இ.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், அகவொளி நிறுவன இயக்குநர் அருட்திரு.எஸ்.ஜே.இராஜ நாயகம், மேக்கன்ரைல் நிறுவனப் பணிப்பாளர் எஸ்.சுகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் அதிக தடவைகள் இரத்த தானம் வழங்கிய தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் பலர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அதிக எண்ணிக்கையான பாடசாலை மாணவர்கள் இரத்ததானம் செய்தமைக்கான விருது சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு வழங்கப்பட்டது. சிறந்த குருதிக் கொடையாளர், சிறந்தகுருதிக் கொடை ஒருங்கமைப்பாளர், சிறந்த அனுசரணையாளர்கள் ஆகியவற்றுக்கான விருதினை மேக்கன்ரைல் நிறுவனப் பணிப்பாளர் எஸ்.சுகுமார் பெற்றுக்கொண்டார். அதிகூடிய தடவைகள் குருதிக் கொடை வழங்கிய மைக்காக எஸ்.கோணநாயகம், என்.ஜெயமாறன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

குருதிக் கொடையை இடைவிடாது ஊக்குவித்து வருவதற்கான யாழ். போதன வைத்திய சாலையின் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் இ.சிவசங்கர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (50-288)





குருதிக்கொடையாளரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று திருமறைக் கலாமன்ற கலைத் தூது மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் இ.சிவசங்கர், பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மேக்கன்ரைல் நிறுவனப் பணிப்பாளர் எஸ்.சுகுமார், அகவொளி நிறுவன இயக்குநர் அருட்திரு எஸ்.ஜே.இராஜநாயகம் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதல் படத்தில் காணலாம். அதிக பாடசாலை மாணவர்கள் இரத்த தானம் செய்தமைக்கான விருதினை சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஜெறோ செல்வநாயகம் பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்தில் காணலாம்.

சிறந்த குருதிக் கொடையாளி, சிறந்த ஒருங்கமைப்பாளர், சிறந்த அனுசரணையாளர் ஆகியவற்றுக்கான விருதினை மேக்கன்ரைல் பணிப்பாளர் எஸ்.சுகுமார் பெறுவதையும் இரத்த வங்கியில் நீண்டகாலம் பணியாற்றியமைக்கான விருதினை ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.சிவலோகநாதன் பெற்றுக்கொள்வதையும் மேலே உள்ள படங்களில் காணலாம்.

# உன்னதமான கலா அனுபவத்தை கொடுத்த "ஆர்கொலோ சதுரர்" புத்தக வடிவில்

ஈழத்தின் நாட்டிய நாடக பாரம்பரியத்தின் முக்கியமானதொரு நாட்டிய நாடகமாகப் பேசப்படுவது 'ஆர்கொலோ சதுரர்'. இது 2003 ஆம் ஆண்டு நாடக அரங்கக் கல்லூரியால் தயாரிக்கப்பட்டு யாழ்ப்பா ணத்திலும் கொழும்பிலும் மேடையேற்றப்பட்டது.

பரதநாட்டியத்தின் வரண்முறைகளுக்குள் நின்று நாடகப் பண்பை அதிகளவு உள்வாங்கிய ஒரு படைப்பாக இதனை நோக்கலாம். நடனக்கோலங்களின் அதிசய பிரவாகத்தோடு இசை அழகும், உரையாடலும், ஒளி அமைப்பும் ஒருங்கே இணையப்பெற்று ஓர் உன்னதமான கலா அனுபவத்தை பார்வையாளருக்குக் கொடுத்த படைப்பாக இதனைக் காணமுடிந்தது.

பரத நாட்டியப் பாரம்பரியத்தில் புதியதொரு முயற்சியாக அனைவராலும் இது இனங்காணப்பட்டிருந்தது. ஒரு ஐதீகக் கதைப்பொருளை அதாவது மாகாபாரத யுத்தத்தை தனது கருப்பொருளாக எடுத்துக் கொண்டு சமாதானதிற்காகக் காத்துக் கிடந்த யதார்த்தத்தை இந் நாடகம் வெளிப்படுத்திற்று. கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம், கலாநிதி இ. முருகையன் ஆகியோர் இதன் எழுத்துருவை படைத்திருந்தார்கள்.

இப்படைப்புக்கான அற்புதமான, வழமை சாரா இசை அமைப்பை த. றொபேட் கொடுத்திருந்தார். விரலிசையும், மிடற்றிசையும், பல்வகை சார் இசை ஒருங்கிணைப்பும் உன்னத மான கலா அனுபவத்திற்கு துணை நின்றன. இசையமைப்பை சா.சிவயோகன் வழிப்படுத்தியிருந்தார்.

இந்தப் படைப்புக்கான நடன வடிவமைப்பை நெறிப்படுத்தியிருந்தவர் திருமதி சாந்தினி சிவனேசன். மேடைவெளியே அழகுற அரங்க வெளியாக அவரது நடனக் கோலங்கள் நிறைந்திருந்தன. அவரது நடனங்களும் அசைவியக்கங்களும் சிறந்ததொரு காண்பிய விளைவைத் தந்திருந்தன.

இப்படைப்பை ஆவணப்படுத்தும் முயற்சியாக தற்போது இது நூல் உருவாக வெளிவந்திருக்கிறது. இதில் நாடக எழுத்துரு, இசைக் குறிப்புக்கள், பங்குபற்றியோரது அனுபவங்கள், விமர்சனங்கள் அடங்கலாக ஒரு முழுமையான விவரங்கள் உள்ளடங்கியுள்ளது.

பரதத் துறைசார்ந்தோருக்கும், நடனத்துறை மாணவர்களிற்கும், நாடக அரங்கியல் மாணவர்களிற்கும் மிகவும் பயனுள் ளதாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதனுடன் 'ஆர்கொலோ சதுரர்' நாடகத்தின் இசைப் பாடல்கள் அடங்கிய இசைத் தட்டும் இணைந்து வழங்கப்படுகின்றது.

-தே. தேவானந்த்-

## நாளை

| | |
|---|---|
| ஆடி 20 | 04.08.2008 திங்கட்கிழமை |
| திதி: | திருதியை பி.ப. 01.19 வரை |
| நட்சத்திரம் : | பூரம் மாலை06.16வரை |
| சுபநேரம் : | 12.04 - 01.34 |
| ராகுகாலம் : | 7.34 - 9.04 ஆடிப்பூரம் |

## ஜி.சீ.ஈ. வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஓக.3

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளுக்கான வினாத்தாள்கள் முதலாவது தொகுதி நேற்று விமானம் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளது.

# செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.3

யாழ்.வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வும் கருத்தரங்கும் நாளையும் நாளை மறுதினமும் காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இக்கருத்தரங்கில் சித்திரம், சங்கீதம், நடனம் மற்றும் நாடகமும் அரங்கியலும் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (202-302)

* * *

யாழ்ப்பாணம், ஓக.3

தீவக வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு பாடசாலை விடுமுறைக் காலங்களில் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன என்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாளை சிங்கள மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நாளை மறுதினம் அழகியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 8ஆம் திகதி கணிதம், சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் -

எதிர்வரும் 9ஆம் திகதி வாழ்க்கைத்தேர்ச்சி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் 12ஆம் திகதி செயற்பாட்டுத் திறன் விருத்தி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

இச் செயலமர்வுகள் யாவும் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (202-267)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.




'உதயன்' பத்திரிகை நிறுவனமும் கொழும்பு யுனிலங்கா நிறுவனமும் இணைந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு நேற்று இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பரீட்சை எழுதிக் கொண்டிருப்பதை முதலாவது படத்தில் காணலாம். தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் குதூகலிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். தேர்வில் அதியுயர் சிறப்புச் சித்திபெற்ற எட்டு மாணவர்கள் திருகோணமலை உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கம், 'உதயன்' பொதுமுகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் மற்றும் வளவார்களுடன் தாம் பெற்ற வெற்றிக் கேடயங்கள் சான்றிதழ்களுடன் காணப்படுகின்றனர்.

## நேற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது நிலைப்பாடுகளை வெளிப்ப டுத்தினர்.

சார்க் உச்சிமாநாட்டுக்கு அப்பால் இரு தரப்பு சந்திப்புக்களிலும் தெற்காசியத் தலைவர்கள் ஈடுபட்டனர். (அ-02)

## பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்காக பயங்கரவாதத்தை கூட்டாகச் சேர்ந்து ஒழிக்க வேண்டியது அவ சியமாகின்றது.

பயங்கரவாதம் தெற்காசியாவுக்கு ஒரு சாபக் கேடாகவே திகழ்கிறது. பயங்கரவாதம் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக இருக்கின்றது. பயங்கரவாதப் போக்குக் காரணமாக சமூகங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் தாக்கம் பற்றி ஆராய்வது மிகவும் முக்கியமானதாகும்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பிராந்திய நாடுகளின் தலைவர்கள் வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றி.

**நல்ல பயங்கரவாதம்
கெட்ட பயங்கரவாதம்
என்று வேறுபடுத்த முடியாது**

பயங்கரவாதத்தை நல்ல பயங்கரவாதம் கெட்ட (மோசமான) பயங்கரவாதம் என்று வேறுபடுத்த முடியாது.சார்க் பிராந்தியத்தில் பயங்கர வாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளில் முன்னோடியாக இலங்கை தனது கிழக்கு மாகாணத்தில் பயங்கரவாதத்தை ஒழித்து அங்கு மாகாணசபைக்கான தேர்தலை நடத்தி, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த முன்னாள் சிறார் போராளி ஒருவரை முதலமைச்சராகவும் தேர்ந்தெடுத்துள்ளது. பயங்கரவாதத்தில் ஈடுபட்ட சிறுசிறு குழுக்களைக் கூட ஜனநாயக நீரோட்டத் துக்குள் கொண்டுவர அரசால் முடிந்துள்ளது - என்றார் ஜனாதிபதி.

அங்கத்துவ நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு அடிப்படையில் மின்சாரப் பரிமாற்றத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவது பற்றியும் ஜனாதிபதி இங்கு ஆலோசனை தெரிவித்தார்.

'சார்க்' பிராந்திய நாடுகளில் வாழும் மக்களுக்கிடையே ஒருமைப்பாட்டையும் நெருக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக சர்வதேச தொலைபேசிக் கட்டணங்களைக் குறைப்பது பயனுடையதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (அ-02)

## சகல பிரஜை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

விடுதலைப் புலிகளிடமிருந்து இலங்கை தொடர்ந்தும் எதிர்கொள்ளும் அச்சுறுத்தலை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராட வேண்டியதையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதேவேளை இலங்கை ஒரு ஜனநாயக நாடு. அதன் அனைத்து மக்களுக்கும் ஜனநாயகம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென உறுதியாக நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இதன் காரணமாக இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் அவர்களது ஜனநாயகம் மதிக்கப்படுவதை அனுபவிக்கும் உரிமை உண்டு.

இலங்கையில் மனித உரிமைகள் மதிக்கப்படுவதையும், துஷ்பிரயோகங்கள் விசாரிக்கப்படுவது மற்றும் அவற்றுக்குக் காரணமானவர்களுக்கு எவ்வித அரசியல் ஆதரவும் கிடைக்காமல் இருப்பது ஆகியவற்றை உறுதி செய்வதற்காக அந்த நாட்டின் அரசுடனும் மக்களுடனும் அமெரிக்கா இணைந்து செயற்படுகின்றது என்றும் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

சார்க் உச்சிமாநாட்டின் போது ஜனநாயகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி குறித்து பேச்சுகள் மேற்கொள்ளப்படும். அதேவேளை, இலங்கை எதிர்கொள்ளும் சில பிரச்சினைகள் குறித்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டு சில முன்னேற்றங்கள் எட்டப்படுவதைக் காண அமெரிக்கா முயலும். - என்றார் அவர்.

## மன்னார், முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்டத்தின் மடு மற்றும் மாந்தை மேற்குப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து 7,000 குடும்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தைப் பிரதேசங்களில் இருந்து 1,500 குடும்பங்களும் கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கு கரையோரப் பகுதியில் இருந்து மேலும் 1,550 குடும்பங்களுமாக 10 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சிமாவட்டத்தில் தஞ்சமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட் டத்தின் வடமேற்கே உள்ள பூநகரி பிர தேச செயலகப் பிரதேசத்திலி ருந்து மக்கள் ஏறக் குறைய அனை வருமே பாதுகாப் பான இடங்களைத் தேடி இடம்பெயர்ந்துள்ளதாகவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் மேலும் கூறினார். (அ)

## மன்னார்மாவட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரா தெரிவித்தார்.

அந்தப் பிரதேசத்திலிருந்த புலிகளின் இரண்டு முகாம்களையும் ஓர் இறங்கு துறையையும் தாம் கைப்பற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த முன்னேற்றத்தின் மூலம் இராணுவத்தினர் கிளிநொச்சி மாவட் டத்தி னுள் பிரவேசித்திருப்பதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் கூறியிருக்கிறது.

வெள்ளாங்குளம் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற மோதல்களில் 10 விடுதலைப் புலிகளும் 2 இராணுவத்தினரும் கொல்லப்பட்டிருப்பதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம்தெரிவித்திருக்கிறது. அத்துடன் வவுனியா, பாலமோட்டை மற்றும் வெலிஓயா பிரதேசங்களில் நேற்று இடம்பெற்ற வெவ்வேறு மோதல் சம்பவங்களில் மேலும் 17 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் கூறியிருக்கின்றது.

எனினும் இது குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து தகவல் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை. (அ-2)

## இந்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுத் தாக்குதல் ஆகியவற்றைக்கண்டித்ததுடன் பிராந்தியத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் உறுப்பு நாடுகள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். காபூல் தாக்கு தலை பாகிஸ்தானிய பிரதமர் யூசுப் ரசா கிலானியும் வன்மையாகக் கண்டித்தார். அதே வேளை நேற்றுக் கொழும்பில் இந்திய, பாகிஸ்தானிய தலைவர்கள் இரு தரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர் .

இந்தப் பேச்சுவார்த்தையின் போது காபூல் குண்டுத் தாக்குதல் குறித்த புலன் விசாரணைகள் பாகிஸ்தான் நடத்தும் என்று பாகிஸ்தான் பிரதமர் உறுதியளித் துள்ளதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர்மேனன் தெரிவித்துள்ளார். (அ)

## ஆழமில்லாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குப் படையணி தொடங்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 12 படகுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த அதிரடிப் படகுப் படையணி, இலங்கைக் கடற்படையில் ஏற்கனவே சேவையிலுள்ள சிறப்புப் படகுப் படையணியுடன் இணைந்து கடற்புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட இந்தப் படகு படையணி முல்லைத்தீவு மற்றும் புல்மோட்டை கடற்பிரதேசங்களில் கடற்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்டுகிறது.

## புலி உறுப்பினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்திச் செல்லப்படவிருந்த ஏராளமான பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அந்தப் பொருள்களை அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தது யார் என்பது பற்றிப் பொலிஸார் விசாரணை நடத்தியதில், சென்னையில் பதுங்கியிருந்த விடுதலைப் புலிகளின் தளபதி டேனியல் (வயது - 46) கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டார். இவர் புதுக்கோட்டை மாவட்டத்தைச் மையமாகக் கொண்டு செயற்பட்டவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து, புதுக்கோட்டை மாவட்டம்தோப்புகொல்லை, அழியாநிலை தேக்காட்டூர் ஆகிய முகாம்களில்பொலி ஸார் புதனன்று இரவு திடீர்சோதனை மேற்கொண்டனர். அங்கீகார அடையாள அட்டை பெற்றுள்ள 974 குடும்பங்களைச் சேர்ந்த 3,600 அகதிகள் பற்றிய விவரங்களை புதுக்கோட்டை பொலிஸார் சரிபார்த்தனர். இந்தச் சோதனையில் நூற்றுக்கும் சேமற் பட்ட அகதிகள், உரிய முகாம்களில் தங்க வில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதுபற்றிப் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் தாக்க முற்பட்ட சிறப்பு அதிரடிப்படையினர் மீது புலிகள் தற்காப்புத் தாக்கு தலை நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட் டார். அதிகாரி உட்பட மூன்று அதிரடிப்படையினர் காயமடைந்தனர். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் அதிகாரி தரத்தினைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். (அ-02)

கணினிப் பயிற்சி Tel:0779672038 (Nallur,Jaffna.)
Laptop மூலமாக வீடுகளில் வந்து கற்பித்துக்கொடுக்கப்படும்.
Photoshop CS3 - 10 Days
CorelDraw X4 - 1 Week
PageMaker 7.0 - 1 Week
Word - 10 Days
Excel - 1 Week
Access - 1 Week
P.Point - 2 Days
உங்கள் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்.
Internet & Email - 1 Week
மாணவர்கள், தொழில்செய்வோர் மற்றும் அனைவரும் பயன்பெறலாம்.

TITA
Rural IT Training Centre
140 Navalar Road, Jaffna
114 Duch Road, Chavakachcheri
சேவை நோக்குடன் மிகக் குறைந்த கட்டணத்தில் இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன் இயங்கிவரும் பயிற்சி நிலையத்தில், பாடசாலை விடுமுறையை முன்னிட்டு ஒரு மாத கால பயிற்சி நெறிகள் ஆரம்பம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Basic Computer Application
(Introduction to Computer ,Ms Word,Ms Excel,Ms Powerpoint)
Introduction to ICT
Inter net & e-mail (10 Hrs)
Visual Basic 6.0 (IT Students)
Adobe Photoshop
Online Classes
புதிய பிரிவு 04/08/2008 ஆரம்பம்
மேலதிக விபரங்களுக்கு நேரில்

கணக்கீடு
P. பகீரதன்
Paper Class
ஆரம்பம்- 04.08.2008
Mon. 3pm
(Mon., Fri. 3 - 4pm)
நாவலர்
ஆனைப்பந்தி .

விற்பனையாகிறது
ஏணிகள்
5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் - 2008
ஆக்கம்-ந. சந்திரகுமார் (மட்டக்களப்பு)
முன்பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும்
O/L - ENGLISH MEDIUM PAST PAPERS
MATHS - 7 வருடம்
Science - 7 வருடம்
மற்றும் English Medium
ஆண்டு 6 முதல் 11 வரையான
ENGLISH MEDIUM BOOKS
அனைத்து பாடங்களும்
அன்னை புத்தகசாலை,
7, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 222 9881
(RAM கொமினிகேசன் அருகில்)

யாழ் வெளியீடு
விஞ்ஞானம்
★ O/L மாணவர்களுக்குரிய 10 மாதிரி வினாத்தாள் (பகுதி-I)
★ விடைகள், கையேடுகள் இலவசம்(பகுதி-II) 10/-
★ வெளிவந்து விட்டது வெளியீடு 01 இன்று முதல் புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
ஆசிரியர்:-M. பிரியந்தன்
T.P: 0779994021

ENGLISH
Gr-6, 7, 8
By
N. விமல்
Nati.Dip.in Teach.(Eng)
ஆரம்பம்
03.08.2007 (இன்று)
ஞாயிறு 9.00 am
★ தரம்1,2,3,4
3ஆம் தவணை வகுப்புகள் இன்று ஆரம்பம்
கற்சுமி
166, நாவலர் வீதி, யாழ்.

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2010&09
B.St. - R.S. பசில்
Acc. - S.தவா
Econ. - N B கஜீகரன்
ENG. - G.Rangit
Tamil - S.சிவா
Chris. - A. மல்லிகா
Hindu. - S.கார்த்திக்
Log. - R.றமணன்
Geo. - A.Rajah
Drama - ஆசிரியர்
C/ma. - ஆசிரியர்
Che. - M.A.நிரோஜன்
Phy. - K.கஜன்
★ O/L Day Class
★ Spoken English
★ சிங்களம்

CB Computer Academy
விளம்பரப்பலகை
விடுமுறைக்கால கற்கைநெறிகள்!!!
Computerized Accounting
Computer Hardware
Programming Languages
Ms Office, DTP
Internet and E-Mail
Children Programme
ICT (Grade 10&11), GIT (A/L)
விடுமுறைக் காலத்தை வீணாக்காதீர்கள்
உங்களுக்குப் பொருத்தமான நேரத்தைத் தெரிவு செய்ய உடனே எமது கலைகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
Station Road, Kondavil. 021 4590291

தகவல் தொழில்நுட்பக்கருத்தரங்கம் மைக்கொம்யூட்டர் சஞ்சிகை யாழ். நகர்மைய றோட்டரக்கழகத்துடன் இணைந்து நடத்துகிறது.
இடம்:- யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்
காலம்:- இன்று காலை 9.30 - 2.30
அனுமதி இலவசம்
மாணவர்கள், ஆசிரியர்கள், அரச அலுவலர்கள் உட்பட சகலருக்கும் ஏற்ற விடயங்கள்

மானிப்பாயில்..........
100% Practical Education!!
பல புதிய விடயங்களுடன்
06/08/08 & 09/08/08 அன்று வகுப்புக்கள் ஆரம்பம்!!
Diploma in Mobile Phone Repairing
(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 0777 - 110862
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.